# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 07 வியாழக்கிழமை (23 07 1998) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 203


# செம்மணி விவகாரம் பற்றி விசாரிக்க இரகசியப் பொலீஸாருக்கு உத்தரவு!

## பாதுகாப்பு அமைச்சு நேற்று விடுத்தது

கொழும்பு, ஜூலை 23

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் பாரிய புதைகுழிகள் இருப்பதாகக் கூறப்படுவது பற்றி விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சு குற்றவியல் புலனாய்வுப் பணியகத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த விவாதத்தில் தொடர்புடையவர்கள் எவராவது இருந்தால் அவர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## 40 இலங்கையர்கள் உகண்டாவில் கைது!

கம்பாலா, ஜூலை 23

உகண்டாவின் தலைநகர் கம்பாலாவில் 40 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக உகண்டாவில் குடியேறிய இவர்கள் இங்கு வேலை செய்து வந்தார்கள் என்றும்—

கம்பாலாவின் ஒரு பகுதியில் வீடொன்றில் 17 பேரும் இன்னொரு வீட்டில் 23 பேரும் நெருக்கமாக வசித்து வந்தனர் என்றும்—உகண்டா பொலீஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் சட்டவிரோதமாகக் குடியேறி வேலை செய்து வந்த குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவார்கள் என்று உகண்டா பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (இ-6-21)

## ஐ. தே. கட்சியின் கொறடாவாக லொக்குபண்டார

கொழும்பு, ஜூலை 23

ஐக்கிய தேசியக்கட்சியின் புதிய கொறடாவாக முன்னாள் அமைச்சர் டபிள்யூ. ஜே. எம். லொக்கு பண்டார நியமிக்கப்பட்டார்,

விஜயபால மெண்டிஸ் வெளியேற்றப்பட்டதை அடுத்து இந்த நியமனம் இடம்பெற்றது. (இ-61)

## கறுப்பு ஜூலை தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

கறுப்பு ஜூலைப் படுகொலைகளின் 15 ஆவது ஆண்டு நினைவு நாள் இன்று ஆகும்.

இந்நாளில் தாக்குதல் சம்பவம் இடம்பெறலாம் என்ற காரணத்தால் முன்னேற்பாடு நடவடிக்கையாக நாடு முழுவதும் பாதுகாப்பு, பலப்படுத்தப்பட்டுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலை படுகொலையின் 15 ஆவது ஆண்டு நிறைவு நாளான நாளை மறுதினம் ரெலோ அமைப்பின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசிய வீரர் தினம் அனுஷ்டிக்கப்படவிருக்கிறது. (இ-3)

# புதைகுழி பற்றி தெரிவித்த சிப்பாயை செம்மணிக்கு அழைத்துவர ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 23

செம்மணிப் பகுதியில் சுமார் 400 பொது மக்களின் சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாக கிருஷாந்தி கொலை வழக்கில் தகவல் வெளியிட்ட சிப்பாய், புதைகுழி இருப்பதாகக் கூறப்படும் இடத்தை அடையாளம் காட்டுவதற்காகச் செம்மணிக்கு அழைத்துவரப்படுவார்.

நேற்று நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. எச். எம். அஸ்வரினால் கொண்டுவரப்பட்ட செம்மணி விவகாரம் தொடர்பான கவன ஈர்ப்புப் பிரேரணையின் போது அரசாங்கம் சார்பாகப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்கம் இத்தகைய கொடூரச் செயல்களை வன்மையாகக் கண்டிக்கின்றது என்று அமைச்சர் மேலும் கூறினார்.

எவ்வாறாயினும் 83 ஆம் ஆண்டு இனக் கலவரத்துக்கு பொறுப்பானவர்களை இன்னமும் தண்டனைக்கு உட்படுத்தாமல் இருக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் மனித உரிமைகள் பேணும் செயல்கள் பற்றிக் கண்டிப்பதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் அவர் கூறினார். (இ-6)

## தீவிர விசாரணை நடத்த அரசு முன்வர வேண்டும்

### எதிர்க்கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 23

"செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பாக தீவிர புலன்விசாரணை மேற்கொள்ள அரசாங்கம் முன்வரவேண்டும்."

இப்படி எதிர்க்கட்சிகள் நேற்று வேண்டுகோள் விடுத்தன.

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. எச். எம். அஸ்வர் நேற்று நாடாளுமன்ற ஒத்திவைப்பு வேளையில் கொண்டுவந்த கவன ஈர்ப்பு பிரேரணை மீதான விவாதத்தின் போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த விவாதத்தில் ஐ. தே. க. சார்பில் ஏ. எச். எம். அஸ்வர், மட்டக்களப்பு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சூட்டுக் காயத்துடன் இளைஞனின் சடலம்

வடமராட்சி, ஜூலை 23

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் பொலீஸாரினால் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து பொலிகண்டி வதுவளை என்னும் இடத்தில் வசித்து வந்த ஒரு பிள்ளையின் தந்தையான மிக்கேல் பிள்ளை றொபேட் வெலிங்ரன் (32 வயது) என்பவரின் சடலம் அது என அடையாளம் காணப்பட்டது.

பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை சடலத்தை பிரேத பரிசோதனை செய்தார்.

மரண விசாரணையை நேற்று நடத்திய பருத்தித்துறை நீதிவான் இ.த.விக்ன

(10 ஆம்பக்கம் பார்க்க)

## சட்டமூலத்தைக் கண்டித்து உரை

கொழும்பு, ஜூலை, 23

நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபை திருத்த சட்டமூலத்தை கண்டித்து தமிழ்–முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றினார்கள்.

ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி, இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ் உட்பட தமிழ் கட்சிப் பிரதிநிதிகளும் சட்டத் திருத்தத்தைக் கண்டித்துப் பேசினர்.

இதனையடுத்து திருத்த சட்டமூலம் மீதான வாக்கெடுப்பு நடத்தப்படாமல் திருத்த சட்டமூலம் நாடாளுமன்ற நிலையியல் குழுவுக்கு பரிசீலனைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. (இ-3)

## வவுனியாவில் கிரனைட்

வவுனியா, ஜூலை 23

வவுனியா மகாவித்தியாலயத்துக்கு அருகில் நேற்று பிற்பகல் 2.40 மணியளவில் கிரனைட் ஒன்று கைப்பற்றப்பட்டது.

இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது. (இ-164-3)

## கடற்படை - புலிகள் கச்சதீவு கடலில் மோதல்

கொழும்பு, ஜூலை 23

கச்சதீவுக் கடலில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் மோதல் இடம் பெற்றதாக பாதுகாப்பு அமைச்சின் தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த மோதலில் புலிகளின் ஒரு படகும் கடற் படையினரின் இரு படகுகளும் சேதமடைந்ததாகவும்—

கடற்படை வீரர் ஒருவருக்குக் காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் ஏனைய படகுகள் இராமேஸ்வரம் கரையை நோக்கிச் சென்றுவிட்டன என்று படையினரால் தெரிவிக்கப்பட்டது. (இ-6)

## கட்டுப்பெத்த பகுதியில் பொலீஸ் துப்பாக்கிச் சூடு!

### சிறுமிகள் உட்பட மூவர் காயம்

மொரட்டுவவில் உள்ள கட்டுபபெத்தவில் பொலீஸார் நேற்று மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பாலர் பாடசாலைச் சிறுமியர் இருவர் உட்பட மூவர் காயமடைந்தனர்.

காயமடைந்த சிறுமிகள் இருவரும் நான்கு வயது நிரம்பியவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. போக்குவரத்துச் சபை டிப்போ பொலீஸ் சோதனைச் சாவடியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

பாலர் பாடசாலை சிறார்களை ஏற்றிச் சென்ற தனியார் வாகனம் மீதே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இச்சம்பவத்தில் காயமடைந்த மூன்றாவது நபரான பெண் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாகனச் சாரதி மொரட்டுவ பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சிவசாமிக் குருக்கள் சரஸ்வதி அம்மா

சிவசாமிக்குருக்கள் சரஸ்வதிஅம்மா 21-07-98 இல் வவுனியாவில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற தெல்லிப்பழையைச் சேர்ந்த நா. சிவசாமிக்குருக்களின் அன்பு மனைவியாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் வவுனியா குருமன் காடு காளியம்மன் கோயிலடியில் அவரது மருமகன் நா. பாலேந்திரக் குருக்களின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

க. இராதாகிருஷ்ண குருக்கள்

45, கடைசாமி கோயில் வீதி,
நீராவியடி.

(57783)

## வைரமுத்து ஆசைப்பிள்ளை

மாலிசந்தி அல்வாய் தெற்கைச் சேர்ந்த வைரமுத்து ஆசைப்பிள்ளை அவர்கள் (22. 7. 98) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற றோசம்மாவின் அன்புக் கணவரும், நடராசா (லண்டன்), கமலா (கிளிநொச்சி), சந்திரா, சகுந்தலா (லண்டன்), காலஞ்சென்ற சித்திரா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், புஸ்பலட்சுமி (லண்டன்), பாலசிங்கம், கருணாகரன், ஜெகதீசன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் பிருந்தா, யுவனா, சதீஸ், தினேஸ், உமெஸ், பிரதீப், ரூபன், றம்யா, நிசாந்த் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று23- 7- 98 வியாழக்கிழமை பகல் 12மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
கருணாகரன்
(மருமகன்)

மாலிசந்தி,
அல்வாய்.

(57786)

# சாரணருக்கு கண் சிகிச்சை

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற குருளைச் சாரணர் விழாவில் கலந்து கொண்ட சாரணர்களுக்கு கண் பரிசோதனையை நடத்தினர்.

நூற்றுக்கு மேற்பட்ட சாரணர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்ட போதிலும் ஒரேயொரு சாரணருக்கு மட்டும் கண்ணில் கோளாறுஇருந்ததைக்கண்டு பிடித்ததாக லயன்ஸ் கழக கண்பார்வைப் பிரிவுத் தலைவர் லயன் சி. கா. நவரத்தினம் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் அருமைநாயகம்

(சுன்னாகம்)

(முன்னாள் முகாமையாளர், நாகம்ஸ் சினிமா)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் – அருமைநாயகம் 22 – 07 – 98 புதன்கிழமை காலமானார்.

இவர் நாகலிங்கம் சிவக்கொழுந்து தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (மாக்கட் கீப்பர்), முருகையா, திருமதி செ. பரமேஸ்வரி, திருமதி சி. பசுபதிப்பிள்ளை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பூ. சிவலிங்கம், காலஞ்சென்ற ஆ. நவரததினம், காலஞ்சென்ற திருமதி இ. கனகம்மா, ஆ. இலங்கைசராஜா, ஆ. தியாகராஜா, திருமதி சரஸ்வதி யோகச்சந்திரன், திருமதி த. இராசமலர் நவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 23 - 07 – 1998 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும் படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:

நா. முருகையா (தம்பி)
(ப. நோ. கூ. சங்கம், சுன்னாகம்)

முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

(57789)

# சமய நிகழ்வுகள்

கொழும்புத்துறை, ஜூலை23

யாழ். குருநகர் புனித யாகப்பர் ஆலயவருடாந்த திருவிழா நவதின ஆராதனைகள் — திருப்பலி ஆகியன தற்பொழுது நடைபெற்று வருகின்றன. நாளை வெள்ளிக்கிழமை நற்கருணைப் பவனியும், ஆராதனையும் நடைபெறும். 25 ஆம் திகதி காலை திருவிழா கூட்டுத்திருப்பலியும் அதனைத் தொடர்ந்து புனித — யாகப்பர் சொரூப பவனி — சொரூப ஆசீர் ஆகியவற்றுடன் திருவிழா நிறைவுபெறும். (ஜ–30)

★ ★ ★

புலோலி தெற்கு சாரையடி அன்னை வேளாங்கண்ணி ஆலய வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 25 ஆம் திகதி திருச்சொரூப பவனியும், மறுநாள் நற்கருணை ஆராதனைகளும், கூட்டுத்திருப்பலியும் இடம்பெறும்.

(இ–109)


ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.

கமல் (இரு வேடம்)
மொனிஷா, சுகன்யா,
கவுண்டமணி, செந்தில்
நடித்த
இந்தியன்
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4336)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
வியாழன், வெள்ளி
விஜய், சுவாதி
விஷ்ணு
சனி, ஞாயிறு
முரளி, தேவயானி
பூந்தோட்டம்
நேரம்:- 10 -30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(57502)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
அகல வெண் திரையில்
ஒன்பது வருட இடைவெளியின் பின் மீண்டும் திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படங்கள் காண்பிக்கப்படுகின்றன.
சுப்பஸ்டார் ரஜனி
மீனா - செந்தில்,
வடிவேல் நடித்த
முத்து
(சினிமாஸ்கோப்)
காட்சிகள்:- 10-30, 2-30
(57787)

கணக்கீடு
பங்குடமை
A/L 99
ஆரம்பம்:-
26 - 07 - 1998
மாலை 2-00 மணி.
D. SAM
D. M. I.
ஸ்ரான்லி வீதி,
யாழ்.
(சி/4352)


United Nations
Development Programme

## வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு அதிகாரசபையின்

### செயற்திட்ட கண்காணிப்பு உத்தியோகத்தர்களுக்கான

# பதவி வெற்றிடங்கள்

வடக்கின் புனரமைப்பு புனர்வாழ்வு அதிகார சபையானது யாழ்ப்பாண மக்களின் மீள்குடியமர்வு புனரமைப்பு நடவடிக்கைகளில் உதவி செய்வதில் ஈடுபட்டுள்ளது. அரசாங்கத்தினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் புனரமைப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்குமுகமாக வடமாகாண புனரமைப்பு புனர்வாழ்வு அதிகாரசபையானது ஒரு தரவு தளத்தைப் (Data Base) பேணுவதோடு செயற்திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனங்களிடமிருந்தும் நிதி வழங்கும் முகவர்களிடமிருந்தும் கண்காணிப்புத் தரவுகளை காலாந்தரம் பெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய இடங்களுக்குச் செயற்திட்ட கண்காணிப்பு உத்தியோகத்தர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. தங்களுக்கு உரிய மாவட்டங்களில் தேவையான தகவல்களைப் பல்வேறு நிறுவனங்களிடமிருந்தும் குறிப்பாக அரசாங்க உத்தியோகத்தர்களான அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், கிராமசேவையாளர் ஆகியோரிடம் இருந்து பெறுவதற்காகப் பரந்த அளவில் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கும்.

**பிரதான கடமைகள்:**

- ★ அரச சார்பற்ற, அரசாங்க நிறுவனங்களிடம் இருந்து செயற்திட்ட கண்காணிப்புத் தரவுகளைக் காலாந்தரம் பெறுதல்.
- ★ பல்வேறு சமூக பொருளாதார புள்ளிவிவரங்களைச் சேகரித்தல், பிரதேச எல்லைகளை வரையறைப்படுத்தல் மற்றும் வட மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபையின் தேவைகளுக்கேற்ப காலத்துக்குக் காலம் ஏனைய தரவுகளைச் சேகரித்தல்.
- ★ பெறப்பட்ட தரவுகளை வடிவமைக்கப்பட்ட தரவுதளத்தில் குறியிடல்.
- ★ பெறப்பட்ட தரவுகளை நேர்மை, பூர்த்தி, பிழையின்மை என்ற நிலைகளுக்குச் சோதித்து ஏற்றுக்கொள்ளல்.
- ★ தரவுகள் தொடர்பான முரண்பாடுகள் முழுமையின்மை என்பன குறித்து தேவையேற்படின் மாறுபட்ட மூலங்களோடு தொடர்பு கொண்டு தீர்வு காணல்.
- ★ வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் தரவுதளத்திற்குக் கிரமமாகத் தரவுகளை அனுப்புதல்.
- ★ வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை தயாரித்த செயற்திட்ட முன்னேற்ற அறிக்கைகளை விநியோகித்தல்.
- ★ வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையின் தரவுதளத்திற்கும் மாவட்ட திட்டமிடல் செயலகங்களுக்குமிடையில் தொடர்பு கொண்டு அந்தந்த மாவட்டங்களிலும் சமமான தரவுதளத்தை அமைத்தல்.

**தகைமைகள்:**

- ★ பின்வரும் ஏதேனும் ஒன்றில் பல்கலைக்கழக பட்டமும் நிருபிக்கப்பட்ட அறிவும் தகவல் ஒழுங்கமைப்பு, புள்ளிவிபரவியல், சமூகவிஞ்ஞானம் திட்டமிடல்
- ★ பட்டம் பெற்றதன் பின்னர் தொடர்பான துறையில் குறைந்த பட்சம் 5 வருட வேலை அனுபவம்.
- ★ சிறப்பான தொடர்பாடல் திறன்.
- ★ சிறப்பான கணனித் தொழிற்திறமை (Familiarity with software such as word processing, spreadsheet and database Programs- EXCEL, LOTUS, ACCESS, Dbase etc)
- ★ ஆங்கிலம் தமிழ் மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றிருப்பது அவசியம், தடங்கலற்ற சிங்கள மொழியறிவு விரும்பத்தக்கது.
- ★ போக்குவரத்துச் சாதனமும் குறித்த மாவட்டத்தில் எந்த இடத்திற்கும் பிரயாணம் செய்யவிருப்பமுள்ளவராக இருத்தல்.
- ★ நிர்வாக நடைமுறையில் அடிப்படை அறிவு உடையவராக இருத்தல்.

ஒப்பந்த காலம்: ஒரு வருடம்

வேலைத் தளங்கள்: யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார்.

சம்பளம்: பேசித்தீர்க்கப்படும்.

மேலுள்ள வேலையில் விருப்பமுள்ளவர்கள் தொழில் புரிய விரும்பும் மாவட்டத்தையும் இரு உறவினரல்லாத நடுவர்களின் தொடர்புகொள்ளக் கூடிய முகவரியுடன் தங்கள் சுயவிவரங்களை இன்றிலிருந்து 10 நாள்களுக்குள் பதிவுத் தபாலில் அனுப்பவேண்டிய முகவரி;

பொது முகாமையாளர்
16/3, கேம்பிரிட்ஜ் பிளேஸ்,
கொழும்பு 07.

குறிப்பு: யாழ். மாவட்டத்தில் இருக்கும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரியில் கையளித்து பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளலாம்.

**இணைப்பு அலுவலர்,**
வடமாகாண புனர்வாழ்வு புனரமைப்பு
அதிகாரசபை அலுவலகம்.
19, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4355)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘அல்துவைமா’ தீவுக்கு உரிமை கோரி
# சவுதி- யேமன் படைகள் மோதல்!

றியாட், ஜூலை 23
செங்கடல் பிரதேசத்தில் அமைந்துள்ள ‘அல்துவைமா’ என்ற சிறிய தீவு தொடர்பாக சவுதி அரேபியா— யேமன் ஆகிய நாடுகளுக்கு இடையே இருந்து வந்த சச்சரவு மோதலில் முடிந்துள்ளது.

இத்தீவு தொடர்பாக இரு நாட்டுப் படைகளும் மோதிக் கொண்டதை சவுதி அரேபியா உள்துறை அமைச்சர் ஊர்ஜிதம் செய்தார்.

யேமன் நாட்டுப் படைகளே சவுதி நிலைகள் மீது முதலில் தாக்குதல் நடத்தியதாகவும் தற்பாதுகாப்புக் கருதிசவுதிப் படைகள் திருப்பித் தாக்க நேரிட்டதாகவும் அவர் கூறினார்.

சவுதி, யேமன் ஆகிய நாடுகளின் கரையில் இருந்து சுமார் 700 மீற்றர் தொலைவுக்குள் அமைந்துள்ள ‘அல்துவைமா’ தீவு ஆறு சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்டது.

இத்தீவின் ஒருபகுதி சவுதியை நோக்கியபடியும் மறு பகுதி யேமனை நோக்கிய படியும் உள்ளது.

இத்தீவு முழுவதிலும் தற்போது சவுதிப்படைகள் தங்கியுள்ளன. (ஐ)

## ஜெருஸலேம் நகரில் கார்க் குண்டு வெடிப்பு

ஜெருஸலேம், ஜூலை 24
ஜெருஸலேம் நகரத்தில் சனநெருக்கடி உள்ள பகுதியில் கார்க் குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

பலஸ்தீனர் ஒருவரே இந்த காரை ஓட்டி வந்ததாகதெரிவிக்கப்பட்டது.

மேற்கு ஜெருஸலேத்தில் இருந்து இஸ்ரேலியப் படைகள் வாபஸ் பெறுவது தொடர்பாக பலஸ்தீன அதிகாரிகளும் இஸ்ரேலிய அதிகாரிகளும் பல மாதங்களின் பின்பு நேரடிப் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதற்கு சில மணி நேரத்தின் முன்பு இச்சம்பவம் இடம்பெற்றது. (இ-ரி)

## பாகிஸ்தானில் ஆளும் கட்சிக்குள் பூசல்

இஸ்லாமாபாத், ஜூலை 23
பாகிஸ்தானில் பொருளாதார நெருக்கடி மேலும் தீவிரமடைந்துவரும் அதே நேரத்தில் ஆளும் முஸ்லிம் லீக் கட்சிக்குள் கிளர்ச்சி வெடிக்கும் அபாயம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நவாஷ் ஷெரீப் அரசு ஆட்டங் காணும் நிலையில் உள்ளதென்று இஸ்லாமாபாத்திலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசைக் கவிழாமல் காப்பாற்றும் பொருட்டு கட்சியின் மூத்த தலைவர்கள் திடீர்ப் புரட்சி ஒன்றை நடத்த திட்டமிட்டு வருகின்றனர் என ‘‘தமுஸ்லிம்’’ என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதனைச் செயற்படுத்துவதற்காக அமைச்சர் ஒருவரின் இல்லத்தில் கடந்த வாரம் மூத்த தலைவர்கள் கலந்து கொண்ட பல கூட்டங்கள் நடைபெற்றதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானை பொருளாதாரச் சிக்கலிலிருந்துமீட்கும் பொருட்டு தொழிலதிபர்களிடமிருந்து அந்நியச் செலாவணியைத் திரட்டும் நெருக்குதல் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

நாட்டைக் காப்பாற்றும் பொருட்டு நவாஷ் ஷெரீப் 30 முதல் 50 கோடி டொலர்கள் தொகையைத் திரட்ட வேண்டுமென்ற யோசனையை இராணுவம் ஆதரிப்பதாக ஆங்கில நாளேடான ‘கான்’ செய்தி வெளியிட்டுள்ளது. (இ-8)

## இரு தலைக் குழந்தை இறந்து விட்டது!

ஹோ-சி-மின், ஜூலை 23
வியட்னாமின் ஹோ-சி-மின் நகரில் கடந்த மாதம் 22 ஆம் திகதி பிறந்த இரட்டைத் தலைப் பெண் குழந்தை நகர வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் இறந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

ஹோ-சி-மின் நகரிலிருந்து 80 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள தியன் ஜியாங் மாகாணத்தில் வசிக்கும் வறிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த தாயொருவரே இக் குழந்தையைப் பிரசவித்திருந்தார்.

ஜூன் மாதம் குழந்தை பிறந்ததிலிருந்து ஹோ-சி-மின் நகர வைத்திய சாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது.

இக் குழந்தையின் தலைக்குக் கீழான முண்டப் பகுதியில் இரண்டு இருதயங்கள் காணப்பட்டன. குழந்தையைக் காப்பாற்றி விட முடியும் என்ற நம்பிக்கையில் உறுதியுடன் வைத்தியர்கள் போராடிய போதும் குழந்தையைக் காப்பாற்ற முடியாது போய்விட்டது. (ஐ-ரீ)


உ

சாவகச்சேரி

அருள்மிகு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

திருவிளக்குப் பூஜை

அடியார்களே!

எதிர்வரும் ஆடிப்பூரத் திருநாளன்று 27-07-1998
திங்கட்கிழமை 2 மணிக்கு திருமணம் ஆகாத
கன்னிப் பெண்களும் சுமங்கலிப் பெண்களும்
பங்கு கொள்ளும் திருவிளக்குப்
பூஜை நடைபெறும்.
பங்கு கொள்ளும் மாதரசிகள் தாமதியாது
தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்க.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

நன்றி.

பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா
[ஆலய தர்மகர்த்தா]

(சி/4338)


## காவிரி குறித்து ஜெயலலிதா காலக்கெடு

பெங்களூர் ஜூலை 23
காவிரி நீர்ப்பங்கீடு பற்றிய தீர்ப்பை பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் அமுல் செய்ய வேண்டும் என்று அ.தி.மு.க.பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் விவசாயிகள் தங்களின் விளைநிலங்

உலக அரங்கில்

களுக்குத்தேவையான தண்ணீர் இல்லாமல் பட்டினியாலும் நோய்களாலும் அவஸ்தைப் படுகிறார்கள் என்று தெரிவித்த ஜெயலலிதா இந்த நதிநீர்ப்பிரச்சினையை முடிவுக்குக்கொண்டுவர பிரதமருக்கு 48 மணிநேர அவகாசம் கொடுத்துள்ளதாகத் தெரிவித்தார்.

ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் இது மிகவும் கடுமையானது என இந்திய நாளேடு ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது. (இ-8)

## ஆவணங்களை சுவிஸ் ஒப்படைத்தது

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ மற்றும் அவருடைய கணவர் சர்தாரி ஆகியோர் மீதான ஊழல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் சுவிற்சர்லாந்து அரசு பாகிஸ்தானிடம் ஒப்படைத்துள்ளது.

ஜெனிவாவில் இருந்து இயங்கும் இரு நிறுவனங்களின் ஒப்பந்தங்கள் தொடர்பான பணத்தை முறைகேடாகச் செலவழித்ததற்காக சுவிஸ் அதிகாரிகள் சர்தாரி மீது சுமத்தியுள்ள முறைப்படியான குற்றச்சாட்டும் இந்த ஆவணங்களில் அடங்கும்.

இத்தொகையின் ஒரு பகுதியை பெனாஸிர் பூட்டோ ஆபரணங்கள் வாங்குவதற்காக பயன்படுத்தினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-8)

## ஈரானியருக்கு மரணதண்டனை

குவைத், ஜூலை 23
போதைப்பொருள் கடத்தல் தடைச் சட்டத்தின் கீழ் முதன் முதலாக இரண்டு ஈரானியருக்கு குவைத்தில் [illegible] [illegible] விதிக்கப்பட்டது. (இ-ரி)



தென்னாபிரிக்க அதிபர் நெல்சன்மண்டேலா தனது பரியார் சகிதம் பிரேசில் சென்றுள்ளார். மண்டேலா தமது 80 ஆவது வயதில் முன்னாள் மொஸாம்பிக் நாட்டு அதிபரின் மனைவி கிறேஸா மார்ஷேலை கடந்த வாரம் திருமணம் செய்துகொண்டார். (ஐ)

## நிவாரணப் பணியாளரை வெளியேற உத்தரவு!

காபூல், ஜூலை 23
ஆப்கானிஸ்தானில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ள நிறுவனங்களை அங்கிருந்து வெளியேறுமாறு தலிபான் இயக்கம் விடுத்த காலக்கெடுவை அடுத்து அங்கிருந்து பல நிவாரண நிறுவனங்கள் வெளியேறி வருகின்றன.

ஆப்கானிஸ்தானின் நிர்வாகம் முற்றாக சீர்கெட்டுள்ள தற்போதைய சூழலில் நிவாரண இயக்கங்களே முக்கியமான மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

தற்போது இவற்றை வெளியேறுமாறு விடுக்கப்பட்டுள்ள உத்தரவு இந்த நிலையங்களில் முற்றாகத் தங்கியிருக்கும் மக்களை நிச்சயம் பாதிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —
‘‘சொலிடாரிட்ஸ்’’ என்ற நிவாரண இயக்கம் அதன் அலுவலகத்தை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் மூடாவிட்டால் அதன் சொத்துக்கள்யாவும் பறிமுதல் செய்யப்படும் என தலிபான் இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிறுவனம் ஆப்கானிஸ்தானில் சுமார் இரண்டு லட்சம் மக்களுக்குரிய உணவு மற்றும் நீர் விநியோக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. சுமார் 14 வெளிநாட்டவர்கள் இதில் பணிபுரிகின்றனர், 700 உள்ளூர் வாசிகளும் இதன் கீழ் பணியாற்றுகின்றனர்.

கடந்த 18 ஆண்டுகளாக இந் நிறுவனம் ஆப்கானிஸ்தானில் தனது பணிகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-ரீ)

## கர்நாடகத்தில் கடற்படைத் தளம்

புதுடில்லி. ஜூலை 23
இந்திய மாநிலமான கர்நாடகத்தின் மேற்குக் கரையோரப்பகுதியான கார்வார் பகுதியில் நாட்டின் மிகப் பெரிய கடற்படைத் தளம் ஒன்றைக் கட்டுவது தொடர்பான பிரச்சினைகளை தீர்க்கும் முகமாகப் பாதுகாப்பு அமைச்சர் ஜோஜ்பெர்னாண்டஸ் கர்நாடக மாநில அரசுடன் கலந்துரையாடினார்.

கடல் பறவை ‘‘சீ பேட்’’ என பெயரிடப்பட்ட இத்திட்டம் 1988 ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியால் தொடக்கப்பட்டது. (இ-ரி)


சாவகச்சேரி – டச்வீதி

அருள்மிகு

ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலயம்

அலங்கார உற்சவம்

அபிஷேகம் தினமும் 11.00 மணி
பழநி வீதியுலா 12.00 மணி

ஆரம்பம்: 23-07 98 தீர்த்தம்: 08 08 98

7 ஆவது

ஸ்ரீ பழநிவேல் பவனி

07-08-98 வெள்ளிக்கிழமைகாலை 11 00 மணி

வைரவ சாந்தி

09-08-98, ஞாயிறு, பிற்பகல் 3 00 மணி
சிறப்புப்போட்டிகளுக்கான பரிசில்களுடன் நிறைவு.

பரிபாலனசபை,
அலங்கார உற்சவ உபயகாரர்கள்.

(சி/4351)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு அறையுடன் கூடிய வீட்டு வளை, மரம், ஓடுகளும், சிமெந்துக் கற்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந. குலசிங்கம், 82A, சீனியர்லேன், கலட்டி, யாழ்ப்பாணம். (57767)

### SPOKEN ENGLISH

சுலபமாக ஆங்கிலம் கதைக்கப் பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426, (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், நாக லிங்கசுவாமிகள் வீதி, சங்கானை (நிகரை வைரவர் கோயில் முன்பாக) (57768)

### வீடு விற்பனைக்கு

சாவகச்சேரி கச்சாய் வீதி பேரம்பலம் ஒழுங்கையில் சகல வசதிகளையும் கொண்ட வீடு (நான்கு அறைகள்இரண்டு விறாந்தை சமையலறை, உட்பட) உடன் விற்பனைக்கு உண்டு. செல்வநாயகம் வனஜா C/O நியு செலக்சன் ரெக்ஸ், 13, நவீன சந்தை உட்புறமாக. சாவகச்சேரி. (சி/4349)

### தவறிவிட்டது

ஆண்டிமரியாள் (வயது 70) என்பவரது தேசிய அடையாள அட்டை யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கட்டுடை முகாம்-2, அரசடி வீதி, மானிப்பாய் எனும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (57766)

விஜயரத்தினம் வசந்தா தேவி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை இல. (438320164V) யும் விசேட அடையாள அட்டை (இல. 0903011839) உம் ஒரே கவரில் வைத்த படி நீர்வேலி இராணுவ முகாமிற்கும் இருபாலைச்சந்திக்கும்இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இருபாலைச் சந்தியிலுள்ள டெனிகூல்பாரில் ஒப்படைக்கவும். (57775)

18. 07. 98 அன்று திருமதி செவ்வேள் சாந்தினி என்ற 617700093X இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டை, தொழில்அட்டை, பாஸ் என்பன அடங்கிய சிறியபேர்ஸ் வதிரிச் சந்திக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அருளானந்தம் ஆசிரியர், உப்புக்கிணற்றடி, அல்வாய்மேற்கு, அல்வாய் அல்லது செ, சாந்தினி, இலங்கைவங்கி, நெல்லியடி என்ற முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [57746]

### குடியிருப்பாள் தேவை

சகல வசதிகளையும் கொண்ட பெரிய வீட்டில் இருவர் வசிக்கின்றார்கள். இவர்களுடன் சேர்ந்து வசிப்பதற்கு 4 உறுப்பினர்களுக்கு மேற்படாத கௌரவமான குடும்பத்தினர் விரும்பத்தக்கது. தொடர்பு: 16/5, சீனியர்லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (கலட்டி அம்மன் கோயிலடி) நேரில் தொடர்பு கொள்ளவும். [57771]

### திருத்துதல்

சகல கமரா வகைகளும், எலக்ரோணிக் பிளாஸ், மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணை சாதனங்களும் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு சு. நாராயணசாமி, 301, கஸ்தூரியார்வீதி [மேல் மாடி[, கன்னாதிட்டிச்சந்தி சமீபம். (57740)

### ஆங்கிலம் விசேடமாக

G. A. Q Paper Class O/L Distinction Credit பெறு பேறுடைய [Spoken English] குறுகிய காலத்தில் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். ஆசிரியர் B.Sc 85, சிவயி கோயிலடி. சிவன்கோவில் மேற்குவீதி, திருநெல்வேலி. [57747]

### ஆசிரியர் தேவை

சிறுவருக்கு சித்திரம் பயிற்றுவிக்கக்கூடிய ஒருவர் தேவை. 25. 11. 98 சனி 10 மணிக்குநேரில் வரவும், இல. 109/ 2, சட்டநாதர்வீதி, நல்லூர். (57772)

### மணமகன் தேவை

இந்து கௌரவ 46 வயதுடைய அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கு தகுந்த 50 வயதுக்குள்ளான மணமகன் தேவை. தகுதியானோர் உதயன் பணிமனை, இலக்கம் 762 இல் தொடர்பு கொள்ளவும். (57777)

## இதோ விற்பனைக்கு!

| | | |
|---|---|---|
| ஆடை நீக்கிய பால் | லீற்றர் | ரூபா 13 |
| மொத்த விலை (10 லீற்றருக்கு மேல்) | | ரூபா 12 |
| யோக்கட் (ஆடை நீக்கியது) | | ரூபா 10 |
| மொத்த விலை (25 – க்கு மேல்) | | ரூபா 8/50 |

தொகையாகப் பெறுபவர்கட்கு அவர்களுக்கு வேண்டிய இடத்தில் விநியோகிக்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்<br>
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,<br>
கலாசாலை வீதி,<br>
திருநெல்வேலி கிழக்கு,<br>
கோப்பாய்.

(சி/4330)

## வாழ்த்துகின்றோம்

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தின் தலைவரும், கைதடி இணுங்கித் தோட்டம் அருள்மிகு கந்தசாமி ஆலயத்தின் நீண்டகால நிர்வாக சபை உறுப்பினருமான

**திரு. இராமலிங்கம் குழந்தைவடிவேலு**

அவர்கள் அண்மையில் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதை மனதார வாழ்த்துவதோடு, இவரின் தன்னலமில்லா மக்கள் சேவையும், இணுங்கித் தோட்ட முருகனது இறைபணியும் தொடர்ந்தும் கிடைக்க வேண்டுமெனவும், அன்னார் முருகனது அருளால் நீடூழி வாழ வேண்டுமென்றும் வாழ்த்துகின்றோம்.

பரிபாலன சபையினர்.

இணுங்கித் தோட்ட முருகன் ஆலயம்,<br>
கைதடி. (57776)

## யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்

வரையறுள்ளது

## வாகன சாரதிக்கான பதவி வெற்றிடம்

சம்பள அளவுத் திட்டம்:

165/88 – 11 – சு. நி. — 31/97 – க்கமைய

2950 - 4700

75 x 10 - 100 x 10

02. தகைமைகள்:
   (1) கல்வித் தகைமை ஆகக் குறைந்தது 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருகக வேண்டும்.
   (2) பேருந்து பாரஊர்தி, பாரம் தூக்கியுடனான உழவு இயந்திரம் ஆகியவற்றுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாகன சாரதி அனுமதிப்பத்திரம்.
   (3) 04 வருடம் வாகனமோட்டிய அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

03. வயது:
   21 தொடக்கம் 45 வரை.

04. விண்ணப்ப முடிவு திகதி: 06 – 08 – 98

05. (1) சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   (2) சங்கத்தில் ரூபா 10 செலுத்தி பெற்றுக் கொண்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
   (3) மேலதிக விவரங்களை சங்கப் பணிமனையில் அறிந்து கொள்ளலாம்.

06. விண்ணப்பங்கள்:

பொது முகாமையாளர்,<br>
யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம் – வ. து.,<br>
291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால்மூலமோ சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்.

21-07-98. (சி/4348)

## நெடுந்தீவு பிரதேசசபை நாளை தொடக்கவிழா

நெடுந்தீவு, ஜூலை 23

நெடுந்தீவு பிரதேச சபையின் தொடக்கவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு புலவர் ஏ. டபிள்யூ. அரிய நாயகம் தலைமையில் நெடுந்தீவு மத்தி றோ. க. மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறும்.

விழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசனும் சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், பல நோ. கூ. சங்கத்தலைவர் எஸ். கோபாலசிங்கம், உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ் தில்லைநாதன் ஆகியோரும்—

கௌரவ விருந்தினர்களாக ஈ. பி. டி. பி. யாழ். மாவட்ட அமைப்பாளர் கே. ஜெகன், ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் என். மனோகரன், நல்லூர் பிரதேச சபைத் தலைவர் எஸ். நிஷாந்தன், நெடுந்தீவு பிரதேசசபை உபதலைவர் எஸ். மோகன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

முன்னதாக நெடுந்தீவு மத்தி பெருக்கடி சித்தி விநாயகர் ஆலயத்திலும் தென்னிந்தியத்திருச்சபை புனித யுவானியார் ஆலயங்களிலும் விசேட ஆராதனைகள் நடைபெறும். (ஐ-111)

## அச்சுவேலி ப. தெ. வ. அ. கூ. சங்க ஊழியர் நலன்புரிச் சங்கம்,

வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

17 – 07 – 98 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டுகளின் முடிவுகள்.

1 ஆம் பரிசு இலக்கம் — **3488**<br>
2 ஆம் பரிசு இலக்கம் — **2405**<br>
3 ஆம் பரிசு இலக்கம் — **2794**

ஆறுதல் பரிசு இலக்கங்கள்:

**0379, 3863, 3146, 3824, 1806**

பரிசுப் பொருள்களை 31 – 07 – 98-க்கு முன் பெற்றுக் கொள்ளவும்.

திரு. ச. தவராசா, தலைவர்.<br>
திரு. ஐ. இராமச்சந்திரன், செயலாளர்.

(57781)

## றோயல் அக்கடமி

சாவகச்சேரி

99, 2000 கலை, வர்த்தக வகுப்புகள்

| | |
|---|---|
| கணக்கியல்: | Mr. கொலின் |
| வர்த்தகம்: | முரளி |
| பொருளியல்: | மோகன் |
| புள்ளிவிவரவியல்: | தவநேசன் |
| அளவையியல்: | பாபுஜீ |
| புவியியல், | நித்தி, ஜெபதாஸ் |
| தமிழ்: | ஆர்த்திகன் |

குறிப்பு மாணவர்களே தென்மராட்சியில் இதுவரை காலமும் பாட அலகுகள் பூர்த்தி செய்யப்படாத குறைபாட்டினை நீக்குமுகமாக யாழ். முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை.

**ஆண்டு 6, 7, 8, 9, 10, 11 வகுப்புகளும் நடைபெறுகின்றன.**

(57782)

க. பொ. த; (உ. த) பரீட்சை – 1998

## வாகனம் வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலை கோரல்

1998 – 08 – 03 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடைபெற உள்ள க. பொ. த (உ/த) பரீட்சை தொடர்பான ஆவணங்களை ஏற்றி இறக்குவதற்கு மோட்டார் / கார்களை குறிப்பிட்ட காலப்பகுதிக்கு வாடகைக்கு அமர்த்துவதற்கு கல்வித்திணைக்களம் உத்தேசித்துள்ளது, யாழ்ப்பாணம வலயம் 01 கல்விப் பணிமனையிலிருந்து உரிய படிவங்களைப் பெற்று அவற்றில் கூறுவிலையைச் சமர்ப்பிக்கும் வண்ணம் வாகன உரிமையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அரக்கு முத்திரையிடப்பட்ட கூறு விலைகள் 1998 – 08 – 28 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு முன் யாழ். வலயம் 01 கல்விப்பணிப்பாளரிடம் ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். சிறிய மோட்டார் கார்களின் கூறுவிலைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

கல்விப்பணிப்பாளர்,<br>
யாழ்ப்பாணம் வலயம் – 01

(சி-4350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதிகள், மதகுகள், சந்தைகள் திருத்த மாநகரசபைக்கு ரூ. 1கோடி 15லட்சம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வீதிகள், மதகுகள், மற்றும் சந்தைகள் புனரமைப்புக்கு ஐ. நா. அபிவிருத்தித்திட்ட உதவியில் வடக்கு மீள்குடியேற்ற அதிகார சபையினால் ஒருகோடியே 15 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வீதிகள் புனரமைப்புக்கு 50 லட்சம் ரூபாவும், மதகுகள் புனரமைப்புக்கு17லட்சம் ரூபாவும் வாய்க்கால்கள் திருத்தத்திற்கு 38 லட்சம் ரூபாவும், பொதுச்சந்தைகள் திருத்தத்துக்கு 10 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளைஉள்ளூராட்சித் திணைக்களமும் மாநகர சபை மேற்கொள்ளும் புனரமைப்பு வேலைகளுக்கென 30 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

நல்லூர் இந்து விடுதி திருத்துவதற்கு 6 லட்சத்து 95 ஆயிரம் ரூபாவும்—

அத்தியடி மதகு புனரமைப்புக்கு 2 லட்சம் ரூபாவும்—

கோயில்வீதி திருத்தத்திற்கு 3 லட்சம் ரூபாவும்—

குருநகர்ச்சந்தைபுனரமைப்புக்கு 2 லட்சத்து 43 ஆயிரம் ரூாவும்—

பாஷையூர்ச் சந்தைக்கு 75 ஆயிரம் ரூபாவும்—

நாவாந்துறைச் சந்தைக்கு ஒரு லட்சத்து 82 ஆயிரம் ரூபாவும்—

அலுவலக தளபாடங்களுக்கு 5 லட்சத்து 74ஆயிரம் ரூபாவும்—

பொதுத் தேவைகளுக்கு 4 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும்—

தொலைத் தொடர்பு புனரமைப்புக்கு 3 லட்சம் ரூபாவும்—

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் இடம்பெற்ற வன்முறைகள்காரணமாக யாழ். மாநகரசபை எல்லைக்குள்ளிருக்கும் வீதிகள், மதகுகள், சந்தைகள், வடிகால்கள் நீண்டகாலமாக திருத்தப்படாமலிருந்தது குறிப்பிடத்தக்கது.

நிதி ஒதுக்கீட்டினைத் தொடர்ந்து இவ்வேலைகளைத்தொடர்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஐ-5)

## ஜனாதிபதி சந்திரிகாவை இந்துக்குருமார் சந்திப்பர்

கொழும்பு, ஜூலை 23

இந்துமதக் குருமாருக்கு பாதுகாப்புப் படையினரால் ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாக இந்துமதக்குருமார்களுக்கும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையில் இன்று காலை 11. 30 மணிக்கு அலரி மாளிகையில் பேச்சுக்கள் நடைபெறவிருக்கின்றன.

இலங்கை பிராமண சமாஜத் தலைவரும், சபரிமலை சாஸ்தாபீடாதிபதியுமான கலாநிதி ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் செல்லும் குழு இப்பேச்சில் பங்குபற்றும்.

(உ-3)

## இலவச வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி இலவச கணித, விஞ்ஞான வகுப்புக்களை நல்லூர் தெற்கு சன சமூக நிலையம் ஒழுங்கு செய்துள்ளது.

கடந்த 15 ஆம் திகதி முதல் இந்த இலவச வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

(ஐ-8)

## அரசாங்க சேவையில் 1500 எழுது வினைஞர்கள் உடன் நியமனமாவர்

அரச சேவையிலுள்ள ஆயிரத்து ஐந்நூறு எழுது வினைஞர் பதவி வெற்றிடங்களையும் உடனடியாக நிரப்புவதற்குப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இத்தகவலை அந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர் ரத்னசிறி விக்ரமநாயக்கா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இப்பதவிகளுக்காகப் புதிதாக விண்ணப்பங்கள் கோரி போட்டிப் பரீட்சை நடத்தி முடிவுகள் வெளிவரத் தாமதங்கள் ஏற்படலாம்.

இதற்குக் கால அவகாசம் போதாது. 1995 ஆம் ஆண்டு நடந்த போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் தான் இவ் வெற்றிடங்கள் நிரப்பப்படும் — என்றார்.

(உ-21)

## பாவனைக்கு உதவாத பால்மா

சாவகச்சேரி, ஜூலை 23

கைதடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் குழந்தைகளுக்கான பால்மா வகைகள்உட்பட சில உணவுப் பொருள்கள்பாவனைக்காலம் முடிவடைந்தபின் விற்பனை செய்யப் படுவதாக பாவனையாளர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-31)

# ஊரடங்கு வேளை நடமாடியதால் பயங்கரவாதி என எண்ணிச் சுட்டோம்

## மரண விசாரணையில் கோப்ரல் சாட்சியம்

ஊரடங்குச் சட்ட நேரத்தில் சைக்கிளில் வந்த இருவரை நாம் வழி மறித்த போதும் அதனை மீறிச் சென்ற காரணத்தினால் அவர்கள் பயங்கரவாதிகள் என்று நினைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டோம்.

கடந்த 8 ஆம் திகதி ஆனைக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்ட வைத்திலிங்கம் அரிச்சந்திரா என்பவரின் மரணவிசாரணையின்போது சாட்சியமளித்த லான்ஸ் கோப்ரல் தஸநாயக்க முதியான் சலாகே நிசாந்த லக்சன் குமார (25 வயது) இவ்வாறு தெரிவித்தார்.

இம்மரணவிசாரணை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் நடைபெற்றது.

தொடர்ந்து சாட்சியமளிக்கும்போது அவர் கூறியதாவது;

சம்பவதினம் சுழாவடி ஆனைக்கோட்டையில் பதுங்கி இருந்து தாக்குதல் நடத்தும் கடமையில் ஈடுபட்டிருந்தேன். அதிகாலை 1. 15 மணியளவில் இருவர் இருவேறு சைக்கிள்களில் ஆனைக்கோட்டையை நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

சைக்கிள்களுக்கு வெளிச்சம் இருக்கவில்லை. அவர்களை மறித்தபோது சைக்கிள்களை நிற்பாட்டாது தொடர்ந்து சென்றனர்.

அதனால் அவர்களைப் பயங்கரவாதிகள் எனக்கருதி நானும் மூன்று ராணுவத்தினரும் அவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டோம். வெடி அவர்கள் மேல் பட்டதும் மீன்காரர் மீன்காரர் என்று தமிழில் சத்தம் போட்டார்கள். நாங்கள் சுடுவதை நிறுத்திவிட்டு கிட்டச்சென்று பார்த்தபோது அவர்களில் ஒருவர் விழுந்து கிடந்தார். உடனே அவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தோம். அங்கே ஒருவர் இறந்துவிட்டதாக பின்னர் அறிந்து கொண்டோம்.

அவர்கள் நடமாடிய நேரம் ஊரடங்குச் சட்ட நேரம். இந்த நேரத்தில் பொது மக்கள் நடமாடுவதாக இருந்தால் படையினர் இனங்கண்டு கொள்வதற்காக அரிக்கன் லாம்புடன் செல்லவேண்டும்.

நாங்கள் கடமையில் ஈடுபட்டிருந்தபகுதி பயங்கரவாதிகள் நடமாடும் பகுதியாகும். அதனாலே நாங்கள் துப்பாக்கிச்சூடு நடத்த வேண்டியேற்பட்டது — என்றும் அவர் கூறினார்.

ரஞ்சித் சிறிசகுமார (23 வயது) என்ற இராணுவத்தினரும் சாட்சியமளித்தார்.

(ஐ - 5 - ரீ)

## யாழ். ஆஸ்பத்திரியில் ஈ. சி. ஜி. இயந்திரம் பழுது நோயாளர்கள் பாதிப்பு

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள ஈ. சி. ஜி. இயந்திரம் பழுதடைந்துள்ளதால் இருதய நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில நாள்களாக அந்த இயந்திரம் பழுதடைந்துள்ளதாகவும்—

அந்த இயந்திரத்தைத் திருத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை என்றும்—தெரியவந்துள்ளது.

[உ-3]

# செய்திக் கொத்து

### பயிற்சிப் புத்தகங்கள்

எதிர்வரும் 26 ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் மானிப்பாய் லயன்ஸ் கழகம் லயன்ஸ் தலைவர் ஏ. சி. செபநாயகம் தலைமையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடத்தும் பொதுக் கூட்டத்தின் போது நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையில் கல்விபயிலும் கட்டுடை குடியேற்றத் திட்டப் பகுதி வாழ் மாணவர்கள் 141 பேருக்கு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான 2 ஆயிரம் அப்பியாசப் புத்தகங்ள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

(இ-90)

### சாரதிகள் சிரமம்

நெல்லியடி ஜலை 23

வல்லை வீதியிலுள்ள சில பாலங்கள் சேதமடைந்திருப்பதனாலும், பாலங்களின் இருமருங்கிலுமுள்ள அணைக்கட்டுக்கள் உடைந்துள்ளதாலும் இப்பகுதியால் செல்லும் பாரமான வாகனங்களில் சாரதிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகிறார்கள்,

(இ - 109)

### நூல் வெளியிடப்பட்டது

கொழும்புத்துறை, ஜூலை 23

கரணவாய் தெற்கு கப்புதூ நுணுப்பாவளை அருள் மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய ஆனி உத்தரத்திருவிழாவின் போது ம. கதிரிப்பிள்ளையின் ஆதரவில் காரை பிரம்மஸ்ரீ கு. சிவராஜ சர்மாவினால் உருவாக்கப்பட்ட "வாழ்க்கைக்கு அருணகிரி" என்னும் நூல் வைத்திய கலாநிதி சி. கதிரைவேற்பிள்ளையினால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

(இ - 30)

### சமூக, உள பயிற்சியாளர் தெரிவு

வலி. தென்மேற்கு, ஜூலை 23

யாழ். சுகவாழ்வு நிலையம் சமூகஉள பயிற்சியாளர்களை விரைவில் தெரிவு செய்து பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கவுள்ளதாக அதன தலைவர் கே. சிறிபதி தெரிவித்தார்.

பயிற்சிநெறிக்கு55-க்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளதாகவும், இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் விரைவில் நடத்தப்பட்டு 15 பயிற்சியாளர்கள் யாழ். குடாநாட்டில் இருந்து தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-135)

### மாநாட்டுக்கு யாழ். பிரதிநிதி

யாழ்ப்பாணம், ஜூலை23

தென்னாசிய மக்கள் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதிநிதிகளுக்கான மாநாடு ஒன்று நாளைமறுதினம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் 15 வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் 35உள்நாட்டுப்பிரதிநிதிகளும் பங்கு பற்றவுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலிருந்து மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் இம்மாநாட்டில் பங்கு பற்றவுள்ளார்.

(ஐ-5)

### தற்காலிக நியமனம்

வலி. வடக்கு, ஜூலை 23

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் கடமையாற்றவென ஐந்து விளையாட்டு உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர் இவர்களுக்கான தற்காலிக நியமனக் கடிதங்கள் வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(இ-86)

### ச.ச.நிலையம் புனரமைப்பு

சுன்னாகம், ஜூலை 23

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையம் அவ்வூர் இளைஞர்களால் புனரமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த இராணுவ நடவடிக்கையின்போது பயன்படுத்த முடியாதளவுக்குச் சேதம் அடைந்திருந்த மேற்படி சனசமூக நிலையத்தை சிரமதான அடிப்படையில் புனரமைக்க அவ்வூர் இளைஞர்கள் முன்வந்தனர்.

கட்டட அமைப்பு வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாகவும், இந்த வார இறுதியில் இது செயற்படத்தொடங்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கையின் பின்னர் இப்பகுதியில் இயங்கவுள்ள முதலாவது சனசமூக நிலையம் இது ஆகும்.

(ஐ-27)

### அறிவியற் கருத்தரங்கு

சாவகச்சேரி, ஜூலை 23

சாவகச்சேரி, கைதடி, நுணாவிலில் அமைந்துள்ள அறவழி நிலையம் மாணவர்கள் உட்பட பொது மக்களின் நன்மை கருதி மாதாந்த அறிவியற் கருத்தரங்குகளை நடத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

(ஐ-31)

### ஆசிரிய கலாசாலைக்கு தளபாடங்கள்

சுன்னாகம், ஜூலை23

கோப்பாய், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு ஒரு தொகுதி தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும வழங்கப்பட்டுள்ளன.

கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள இப்பொருள்கள் குசன் கதிரைகள், இரும்பு அலுமாரிகள், தட்டச்சு இயந்திரங்கள், தொலைக்காட்சி, நீரிறைக்கும்இயந்திரம் போன்றன அடங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

பலாலி ஆசிரிய கலாசாலையில் வணிக நெறியில் விசேட பாடமாகவுள்ள தட்டச்சுப் பாட நெறிக்கு தட்டச்சு உபகரணங்கள் இல்லாதிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-27)

### இல்ல வழிபாடு


கொழும்புத்துறை ஜூலை 23

யாழ். சுண்டுக்குளி புனிதயுவானியார் ஆலய மரியாயின் சேனை பிரசீடியத்தினர் வாரந்தோறும் இல்லங்கள் தோறும் வழிபாடு செய்து வருகின்றனர்.

(ஐ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திவசமும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 16 |  | 02 |
| — | | — |
| 06 | | 08 |
| — | | — |
| 1930 | | 1997 |

அமரர்

**வைரவப்பிள்ளை சிவக்கொழுந்து**

(முன்னாள் ஆய்வுகூட உதவியாளர், புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி)

திதி: ஆடி அமாவாசை **23 - 07 - 1998**

இறைவனடி சேர்ந்த எமது தந்தையின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார். உறவினர்.

விக்னேஸ்வரா வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(57638)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

**சின்னம்மா காசிப்பிள்ளை**

தோற்றம் 1938-05-02 மறைவு 1997-08-03

ஆடி அமாவாசை திதி: **23—7—98**

ஆனதோ ஆண்டொன்று வேதனையோ தாழவில்லை
நோயென்றும் படுக்காது குறியேனுங் காட்டாது
மீளாத்துயில் கொண்ட பாசக் குலவிளக்கே!
கண்கண்ட தெய்வம் இங்கு உன்போலுளதோ?
அமைதிவழியினிலே சுமைகள் பல சுமந்திட்டாய்
உன் தயவின்றித் தவிக்கின்றோம்!
இனி ஆரிடம் முறையிடுவோம்?
அல்லல் மிகு உலகினில் ஆறாது எம் துயர்;
மாறாது உன் நினைவு.

அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி பெற வட்டுவினி பிள்ளையார், வட்டுவினி வைரவர், வட்டுவினி கண்ணகை அம்மாள் பாதம் பணிந்து கண்ணீர்ப் பூக்களால் துதிக்கின்றோம்.

கணவர்: பொ.காசிப்பிள்ளை
பிள்ளைகள்: சிவநேசன், வரதராஜா, சுசிலாதேவி, காந்தகுமார்
மருமக்கள்: அனுலா. சிவலிங்கம்
பேரர்கள்: கஜன், அம்பதீசன், அருண்

"பொன்னப்பா பதி"
இணுவில் மேற்கு,
இணுவில்.

(57758)

# வனவள சுற்றாடல் பாதுகாப்புக் குழு

# தென்மராட்சிப் பிரிவில் அமைப்பு

சாவகச்சேரி, ஜூலை 23

வன வளங்கள் மற்றும் சுற்றாடல் அமைச்சின் 3/97 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி தென்மராட்சிப்பிரதேசசெயலர் பிரிவில் பிரதேச வனவள சுற்றாடல் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. வெவ்வேறாக இயங்கிய பிரதேச வனவள குழுவும், பிரதேச சுற்றாடல் பாதுகாப்புக் குழுவும்- ஒன்றிணைக்கப்பட்டு பிரதேச வனவள பாதுகாப்புக் குழு நிறுவப்பட்டுள்ளது.

இக் குழுவின் தலைவராக பிரதேச செயலரும், இணைத் தலைவர்களாக நகரசபைத் தலைவரும், பிரதேசசபைத் தலைவரும் செயற்படுவார்கள்.

இக் குழுவில் உதவிப் பிரதேச செயலர் வனபரிபாலன உத்தியோகத்தர்கள், விவசாய போதனாசிரியர், திட்டமிடல் உதவிப்பணிப்பாளர், திட்ட உத்தியோகத்தர், பெரும்பாக உத்தியோகத்தர், பொலீஸ் பொறுப்பதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி, பிரதிக் கல்விப் பணிப்பாளர், சமயப் பெரியார்கள், காணி உத்தியோகத்தர், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், ஆயுர்வேத வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி, நகரசபைச் செயலர், பிரதேச சபைச் செயலாளர் ஆகியோர் அங்கம் வகிப்பார்கள்.

இக் குழுவினர் பின்வரும் பணிகளை நிறைவு செய்வார்கள்.

★ வனவளத்தைப் பாதுகாககத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

★ வனவளமும், சூழலும் போன்ற அபிவிருத்திக்கு வேண்டிய வேலைகளை ஆலோசித்தல்.

★ மரம், பலகை போன்றவற்றை எடுத்துச் செல்லத் தேவையான விண்ணப்பங்களை பரிசீலனை செய்தல்.

★ சூழலுக்குத் தீமை ஏற்படும் நடவடிக்கைகளைத் தவிர்த்தல்.

★ சூழல் அபிவிருத்தி சம்பந்தமாக ஆய்வுகளை மேற்கொள்ளல்.

★ சூழல் சம்பந்தமான சட்டதிட்டங்களைப் பொது மக்கள் அறிந்து கொள்ள செயற்றிட்டம் வகுத்தல்.

இக் குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தென்மராட்சிப்பிரதேசசெயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-31).

## மாதாந்த இசையரங்கு

நல்லூர், ஜூலை 23

நல்லை ஆதீன மாதாந்த இசையரங்கு எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3-30 மணிக்கு ஆதீன கலாமண்டபத்தில் யாழ். இந்துக்கல்லூரி அதிபர் அ. ஸ்ரீக்குமரன் தலைமையில் நடைபெறும். இசை அரங்கில் ந. தனசொரூபியின் பாட்டு இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து நல்லூர் 'கந்தன் பக்தி ரசப் பாமலர்கள்' ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா நடைபெறும்.

வைத்திய கலாநிதி சு. நச்சினார்க்கினியன் ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டு வைப்பார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், ஆறு. திருமுருகன் ஆகியோர் உரையாற்றுவர். (ஐ-103-30)

## மழலைகள் விளையாட்டு விழா

சாவகச்சேரி, ஜூலை 23

சரசாலை மத்தி அம்பாள் அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஞாயிறு அம்பாள் மழலைகள் கல்விப்பூங்கா அபிவிருத்திச்சபைப் பொருளாளர் சிவஸ்ரீ ந. இராஜேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெற்றன.

இந் நிகழ்வில் சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவர் வே. அருணந்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கைதடி நவீல்ட் பாடசாலை ஓய்வு பெற்ற அதிபர் க. கோபாலகிருஸ்ணனும், வைத்திய கலாநிதி [illegible] ஓய்வு பெற்ற [illegible] கலந்து கொண்டனர்.

(ஐ-31-117)

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 07 |  | 23 |
| — | | — |
| 06 | | 07 |
| — | | — |
| 1940 | | 1985 |

திருமதி

**லூட்ஸ் மார்கிறெட் றோஸ் தேவதாஸ்**

(சரோஜினி)

கண்ணிமை போற் காத்து நின்ற அன்னையே!
சரோஜினியே!
எண்ணமதில் நீங்காத நிலை கொண்ட உத்தமியே!
பத்தினொடு மூன்றாண்டு பறந்துமே சென்றதுவோ?
எத்தனைதான ஆண்டுகள் ஓடிமறைந்தாலும்
பத்தாவும் பிள்ளைகளும் மறந்திருக்க மாட்டோமே!

- குடும்பத்தினர்

25/1, சோமசுந்தரம் லேன்,
யாழ்ப்பாணம்.
Melbourne,
Australia.

(57770)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 |  | 02 |
| — | | — |
| 04 | | 08 |
| — | | — |
| 1932 | | 1997 |

**ஸ்ரீமதி வாலாம்பிகைஅம்மா சிவசுப்பிரமணியஐயர்**

திதி: ஆடி அமாவாசை

அம்மா அம்மா என்று ஏங்கி அழவிட்டு
ஆடி அமாவாசையிலே எங்கே சென்றீர்கள்?
ஓராண்டல்ல ஓராயிரமாண்டுகள் வந்தாலும்
ஓய்ந்திடுமா எங்கள் துயர்!
இனி, எங்கே உங்களைக் காண்போம் அம்மா!

உங்கள் ஆன்மா சாந்தியடைய கற்பொக்கணை விநாயகரை என்றும் துதிக்கின்றோம்.

கணவன் நீ. சிவசுப்பிரமணிய ஐயர்
(கோப்பாய் வெள்ளெருவைப்பிள்ளையார் கோயில் உரிமையாளரும், நீர்வேலி பலநோ. கூ. சங்க இளைப்பாறிய பொது முகாமையாளரும்)
மகள், மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

"சிவஅம்பிகை வாசம்"
சந்தானம் போட்டோ,
அம்பலவாணர் வீதி,
உடுவில்.

(சி/ 4333)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## எமது வளர்ச்சிக்கு எங்கள் பணம்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கிராமியக் கூட்டுறவு வங்கிகள் தமக்கென சமாசமொன்றை உருவாக்கி உள்ளன.

இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களின் சேமிப்பு இப்பிரதேச பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படவேண்டும் என்பதே சமாசம் தோற்றுவிக்கப்பட்டதன் பிரதான நோக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது. பிரஸ்தாப சமாசத்தினூடாக யாழ். குடாநாட்டின் கூட்டுறவுத்துறை வளர்ச்சிக்கும் கிராமிய வங்கிகளின் சமாசம் பெருமளவில் பங்களிப்புச்செய்ய முடியும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு அல்லது ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கூட்டுறவுத்துறை மிகச்சிறப்பாகவும், சீராகவும்இயங்கியது. சமூக, பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. நாட்டின் ஏனைய பகுதியினர் பார்த்துப் பொறாமைப்படும் அளவுக்கு இங்கு கூட்டுறவு வங்கியும் இயங்கியது. அந்த வங்கியின் ஊடாக இப்பகுதியில் பல தொழிற்றுறைகள் மேலோங்கின.

இது கண்டு சகித்துக் கொள்ள முடியாத அப்போதைய கொழும்பு அரசு, கூட்டுறவு வங்கியை மூடி மக்கள் வங்கியுடன் இணைத்தது. பின்னர் அதற்குப் பதிலாக கூட்டுறவு கிராமிய வங்கிகள் நிறுவப்பட்டன. எனினும் கூட்டுறவு வங்கி சகாப்தத்தின் போது இருந்த பொருளாதார வளர்ச்சி, கிராமிய கூட்டுறவு வங்கிகள் வந்தபின் நலிந்து போகத் தொடங்கியது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற பெயர் சூட்டப்பட்ட போதிலும், அவற்றில் மிகப்பலவும் அத்தியாவசிய உணவுப் பொருள்களையும்குறைந்த எண்ணிக்கையிலான பாவனைப் பொருள்களையும் விநியோகிக்கும் கடைகளாகவே இயங்கின; இயங்கி வருகின்றன.

இத்தனைக்கும், எமது மக்கள் சேமிப்பிலிடும் பணம் அரசாங்க மற்றும் வர்த்தக வங்கிகளின் கைகளில் சேர்ந்து வெளிப் பிரதேசங்களின்வளர்ச்சித் திட்டங்களுக்கு மூலதனமாகியது.

எங்கள் மக்களின் பணம் — சேமிப்பு — எங்கள் பிரதேச பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனமாகும் வாய்ப்பு இல்லாமற் போயிற்று. குடாநாட்டில் சேமிக்கப்படும் பணம் கடன் வசதியாகவோ, அல்லது உதவுதொகை வசதியாகவோ இந்தப்பிரதேசத்துக்கு பயன் பட்டதில்லை.

இந்த முரண்பாடான தன்மை நீக்கப்பட வேண்டும்; எங்கள் மக்களின் பணம் எங்கள் பிரதேச வளர்ச்சிக்கே பயன்பட வேண்டும் என்று இப்பத்தியில் பல தடவைகள் வலியுறுத்தியுள்ளோம்.

ஆனால் அரசு அது குறித்து இதுவரை அக்கறைகாட்டவில்லை. அரசுக்குச் சவாலாக செயற்படும் திறமையும், நேர்மையும், கண்ணியமும், புதியசமாசத்திடம் இருக்குமாயின் அது பெரும் மாற்றத்தைக் கொண்டு வரும்; எமது மக்கள் வளர்ச்சிப் பாதையில் அடி எடுத்து வைக்க வழி செய்யும்.

# திரை மறைவில் வீற்றிருந்து திசை அனைத்தும் ஆளும்கதிர்காமக்கந்தன்

முருக வழிபாட்டுக்குரிய திருப்பதிகளில் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றும் அமையப் பெற்று புகழ்பெற்றுத் திகழ்வது கதிர்காமம். கதிர்காமம் என்பது கடவுள் தன்மையுடைய ஒளியும், அன்பும் கலந்து விளங்குமிடம் எனப் பொருள்படும். முருகவேள் சூரபத்மனைச் சங்கரிக்கும் நோக்கோடு எழுந்தருளிய போது கதிர்காமத்தை அடைந்து மாணிக்க கங்கையருகில் பாசறை வகுத்து வீற்றிருந்தார் என்றும், அவ்விடம் ஏமகூடம் எனப்பட்டது என்றும், பின்னர் சூரபத்மனை வென்று வாகை சூடி மீண்டபோது கதிர்காமக்கிரியில் நவகங்கா தீர்த்தமுண்டாக்கிச் சிந்தாமணி ஆலயத்தில் வீற்றிருந்தார் என்றும் புராணம் கூறுகின்றது.

வள்ளி நாயகியைக் கண்டு காதலித்து மணம் புரிந்த இடம் கதிர்காமம் என்பது ஐதிகம். 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதரும் இத்தலத்தைத் தரிசித்து இருபத்தைந்திற்கு மேற்பட்ட திருப்புகழ் மாலைகளைச் சூட்டியுள்ளார்.

முற்காலத்தில் சைவர்கள் தாம் நினைத்தபோதெல்லாம் கதிர்காம யாத்திரை செல்வதில்லை. கதிரைமலையாண்டவன் (கனவிற்றோன்றி) விடை கொடுத்தாலன்றிப் பக்தர்கள் கதிர்காம யாத்திரை செய்யத் துணியார்கள். எல்லோரும் கால் நடையாகவே பாத யாத்திரையாக, இரவு பகலாக, காடு மேடு பள்ளங்களூடாக, முருகனின் புகழ் பாடி, ''அரோகரா'' கோஷமெழுப்பிச் செல்வார்கள். இப்படிச் செல்லும் பக்தர்களை முருகன் கொடிய விலங்குகளிடமிருந்தும், அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்கியும் காத்து வந்துள்ளான் என்பதை அக்காலத்தில் கதிர்காமம் சென்ற அடியார்கள் கூறும் போது உருகி மெய் சிலிர்க்காதோர் யாருளர்?

கதிர்காம வேலனுக்கு கப்புறாளைமார் மஞ்சள் துணியால் வாயைக்கட்டி அமுதினை அன்னக்காவடியாகச்சுமந்துசென்று உள்ளே வைத்தபின் மௌனமாக திரைச்சீலை முன்பாக நின்று ஓங்கார வடிவாகக் கைகள் இரண்டினையும் கூப்பி வழிபடுவர். பூசை நடைபெற முன் ஆராத்திப் பெண்கள் (இவர்கள் தாங்கள் வள்ளியம்மனின் பரம்பரை என்பர்) ஆலாத்தி எடுக்கமேளம், பேரிகை என்பன முழங்கும். சந்நிதியில் அடியார்கள் சாதி, குலம், பதவி எனும் தடுமாற்றம் கடந்தவர்களாய் ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' எனும்



பேருண்மையை கடைப்பிடித்தவர்களாய் விளங்குவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

இக்கோயிலை துட்டகைமுனு, எல்லாளன் என்ற அரசனை வென்றபின் முருகனுக்கு நேர்த்தியாக கட்டினான் என ''கந்த உபத'' எனும் சிங்கள நூல் கூறுகிறது. முருகனை சிங்கள மக்கள் 'கதரகம தெய்யோ' என்று கூறுவர். முருகனின் சந்நிதி தெற்கு நோக்கியும், வள்ளியம்மனின் ஆலயம் வடக்கு நோக்கியும், தெய்வானை அம்மனின் ஆலயம் கிழக்கு நோக்கியும் அமைந்துள்ளது.

கொடியேற்றம் தொடங்க 45 நாள்களுக்கு முன் வள்ளியம்மன் கோயில் கப்புறாளை முருகன் கோயிலுக்கு வந்து. அந்தக் கப்புறாளைகளிடம் வள்ளி, முருகன் திருமணம் செய்ய ஒழுங்குகள் செய்து கன்னிக்கால் நாட்டுவார்கள். இதன்பின் கணபதியிடம் கப்புறாளைமார் வணங்கி ஆசி பெற்றதும், ,மகுல் பெரகர எனும் கல்யாண ஊர்வலம், முருகன் ஆலயத்திலிருந்து 'பசநாயகநிலமே' தலைமையில் வைத்து .யானை மேல் மறைத்து மூடிய முருகப் பெருமானை தலைமைக் கப்புறாளை வள்ளியம்மன்

**ம. சிவயோகசுந்தரம்**

ஆலயத்திற்கு எடுத்துச் சென்று வைப்பார். அங்கிருந்து அவர் வெளியில் வந்ததும் வள்ளியம்மன் கோயில் கப்புறாளை அங்கு வந்துள்ள பசநாயக்நிலமே, ஆராத்திப் பெண்கள் உட்பட எல்லோருக்கும் சிற்றுண்டி, வெற்றிலை என்பன கொடுத்து மகிழ்வர். அப்போது மேள, பேரிகை, கண்டிய நடனம் என்பன ஒலிக்கும். உரிய நேரம் வந்ததும் பசநாயகநிலமே வாத்தியங்களை நிறுத்தச் சொல்வார். அப்பொழுது முருகன் கோயில் தலைமைக்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

# ஆங்கிலக் கல்விப் போதனை வசதி குடாநாட்டில் சீராக்கப்பட வேண்டும்

இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி வைத்துக் கொண்டிருக்கும் நாம் சர்வதேச மொழியான ஆங்கிலத்திலும் அதிக கவனஞ் செலுத்த வேண்டும் என்பது தற்கால உலகின் கட்டாய தேவை. இந்த நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெரும்பாலான பாடசாலைகளில் பெருமளவு மாணவர்கள் ஆங்கில அறிவில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதொன்றாகும்.

உதாரணமாக தென்மராட்சிப் பகுதியில் 97 ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு பாடசாலையூடாகத் தோற்றிய மாணவர்களில் 69 பேர் மட்டுமே ஆங்கிலப் பாடத்தில் சித்தியடைந்தனர். இது மொத்த பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையில் 0.9 சதவீதமாகும்.

**ச. கிருஷ்ணன்**

இந் நிலைக்கு கல்வி அமைச்சும், கல்வி அதிகாரிகளும் பிரதான காரண கர்த்தாக்கள் எனலாம். யாழ். மாவட்டத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பெரும் பற்றாக்குறையாக இருக்கிறார்கள்.

இந்த நிலைக்கு காரணம் என்னவெனில் முன்னைய கல்வித்திட்டங்களில் காணப்பட்ட குறைபாடும், பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் போதியளவு உருவாக்கப்படாமையும் ஆகும்.

இப்பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு கல்விஅதிகாரிகள் கையாண்டுள்ள வழி பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் தற்காலிக நியமனம் ஆகும். இவர்கள் ஆங்கில எழுத்துப் போட்டிப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆவர். இவ்வாறு நியமனம் பெறுவோருக்கு ஆங்கில அறிவு இருக்கலாம். ஆனால் ஒரு பிறமொழியை இலகுவாக கற்பிக்கும் திறமையும், போதிய அனுபவங்களும் இல்லை என்றே கூறலாம்.

இத்தகைய ஒரு பின்னணியில் ஒரு சில பயிற்றப்பட்ட ஆசிரியர்களை கல்லூரிகளுக்கு நியமித்து விட்டு, ஏனைய பாடசாலைகளில் பகுதிநேர ஆசிரியர்களைக் கொண்டு கல்வி அதிகாரிகள் சமாளித்துக் கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலான பாடசாலைகளில் பகுதிநேர ஆசிரியர்கள் அதிபர்களின் கட்டாயப்படுத்தலுக்கு இணங்க ஆண்டு 9, 10, 11 வகுப்புகளுக்கு கற்பிக்க வேண்டி இருக்கின்றது.

மாணவர்களிடமும் ஆங்கில அறிவு இல்லை; ஆசிரியர்களிடமும் பூரண ஆங்கில அறிவு இல்லை. குறிப்பாக இப்பகுதி நேர ஆசிரியர்களில் பெரும்பாலானவர்களுக்கு மாணவர்களுடன் ஆங்கிலத்தில் பேச முடியாதுள்ளது. தங்களுக்கு விளங்காத விடயத்தைக் கூட மாணவர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டியநிலை.

இந்நிலையில் கற்பித்தல் செயற்பாடும் கிரகித்தல் செயற்பாடும் எவ்வாறு இனிப்புடையதாக இருக்கும்? ஓர் அந்நிய மொழியைக் கற்பிப்பதற்கு அம்மொழியில் பாண்டித்தியம் பெற்ற ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராலேயே முடியும் என்பது யாவரும் அறிந்த உண்மை. இதனால் பெரும்பாலான பகுதி நேர ஆசிரியர்களின் கற்பித்தல் மாணவர்களுக்கு விளங்குவது குறைவு. ஆசிரியர்களுக்கு விளங்கப்படுத்தும் ஆற்றலும் குறைவு. அதனால் பிள்ளைகளுக்கு ஆங்கிலப்பாடம் கசப்புடையதாக மாறுகிறது. இதைவிட ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்களும் இப் பகுதி நேர கற்பித்தலுக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். இவர்களில் பலர் தமக்கு வழங்கப்படும் வேதனம் போதாது என்ற நிலையில் சலிப்புற்றுக் காணப்படுகிறார்கள்.

**மக்கள் அரங்கு**

ஆங்கிலம் கற்பிப்பதில் போதிய பாண்டித்தியம் இல்லாதவர்கள் மூலமாகவும், குறைந்த வேதனம் காரணமாக மனமொன்றிப் பயிற்றுவிக்க முடியாதவர்கள் மூலமாகவும் மாணவர் சமூகத்தை இப்போது சமாளித்துக்கொண்டு சென்றாலும் இது எதிர்காலத்தில் எந்தளவு பாதிப்பைத்தரும் என்பது பற்றிக் கல்வி அதிகாரிகள் சிந்திக்க வேண்டும்.

பகுதிநேர ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றும் இள வயதினர் நிரந்தர வேலை வாய்ப்புக் கிடைத்தவுடன் வேறு தொழில்களுக்கு மாறி விடுவார்கள்; மாறிக் கொண்டும் இருக்கிறார்கள். இந்நிலையில் பாதிக்கப்படுவோர் கல்வி அமைச்சருமல்லர்; கல்வி அதிகாரிகளும் அல்லர். எதிர்கால மாணவ சமூகமே ஆகும். இதனை உணர்ந்து எதிர் காலத்தைக் கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டும்.

பெரும்பாலும் கல்வி அதிகாரிகளினதும், அதிபர்களினதும் பிள்ளைகள் பெரிய, வளமுள்ள கல்லூரிகளிலேயே

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்சியை முடித்த மதுவரிக்காவலர் நியமனம்

நெல்லியடி, ஜூலை 23

யாழ். மாவட்டத்தில் ஆறு மாத காலப் பயிற்சியை முடித்துள்ள பதின்மூன்று மதுவரிப் பாதுகாவலர்களும் கடந்த ஜூன்மாதம் 12 ஆம் திகதியிலிருந்து தமதுகடமைகளைப் பொறுப்பேற்றனர்.

பருத்தித்துறை மதுவரி நிலையத்திற்கு இருவரும், சாவகச்சேரி மதுவரி நிலையத்திற்கு இருவரும், யாழ். மதுவரி நிலையத்திற்கு இருவரும், மல்லாகம் மதுவரி நிலையத்திற்கு ஒருவரும், சங்கானை மதுவரி நிலையத்திற்கு ஒருவரும், கிழக்கு மாகாணத்திற்கு ஐவரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஐ–109–30)

## நாளை

ஆடி -08

வெள்ளிக்கிழமை

திதி: பிரதமை

முன்னிரவு: 08.01வரை.

நட்சத்திரம்: பூசம்

பிற்பகல்: 2.58 வரை.

சுபநேரம்: 06.02 - 07.32

ராகுகாலம்: 10.32-12.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

கடலில் கண்விழித்து எழுவதை விட இராப்பட்டினியுடன் படுக்கப் போவது நல்லது.

— பெஞ்சமின் பிராங்ளின்

## சாயி சிந்தனை

கண்களிருக்கின்றன என்று காக்கையைப் போல் காணக்கூடாது. காகம் எல்லாத்திசைகளிலும் பார்க்கும். எதைப்பார்க்கும்? கெட்டுப்போன பொருள்களை மட்டும் தான் காணும்.

நம் கண்கள் பவித்திரமான இறைவன் மேல் மட்டுமே உறுதியாக இருக்க வேண்டும். கண்களைத் திறந்தாலும்; மூடினாலும்; தெய்வவடிவமே தென்பட வேண்டும். இப்படிப்பட்ட பார்வை இருந்தால் இவ்வுலகம் முழுவதும் தெய்வீகமாகத் தெரியும்.

[ஆதாரம்: சனாதனசாரதி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள்
# இடையூறின்றிச் செயற்பட உதவுக

## படைத்தளபதிக்கு இணையம் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

'பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறாமல் அரச சார்பற்ற நிறுவனங்கள் வடக்கில் செயற்பட முடியாது என அரசு விதித்துள்ள தடை காரணமாக வடக்கில் தமது சேவையை முழுமையாக ஆற்றமுடியாத நிலையில் அரசசார்பற்ற நிறுவனங்கள் உள்ளன. எனவே இத்தடையை நீக்குவதற்கு தாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.'

இவ்வாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வடபகுதி படைத்தளபதி மேஜர் ஜெனரல் பலகல்லவுக்கு கடிதம் ஒன்றை நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் அரசசார்பற்ற நிறுவனங்கள் எதிர்நோக்கும் இடர்கள் தொடர்பாக மே மாதம் 19 ஆம் திகதி தங்களுடன் நடந்த கலந்துரையாடலில் தெளிவாக விளக்கியிருந்தோம். அரச சார்பற்ற நிறுவனங்கள் இங்கு செயற்படுவதில் எந்த இடையூறும் இருக்க மாட்டாது எனவும்—

அரசசார்பற்ற நிறுவனங்கள் இங்கு சிறப்பாக செயற்படுவதற்கு வேண்டிய ஒழுங்குகளை எமக்குச் செய்து தருவதாகவும் —

தாங்கள் உறுதியளித்திருந்தீர்கள். ஆனால் தற்சமயம் அரசு விதித்துள்ள இந்தக் கட்டுப்பாட்டினால் நாம் செயற்பட முடியாத அளவு பல இடையூறுகளை எதிர்நோக்கி வருகின்றோம். எனவே தங்களின் அதிகாரத்தைப் பயன்படுத்தி எமது செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

— இவ்வாறு அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-9)

## கூட்டுறவுமாவட்ட

# சமாசத்துக்கு கப்பலில் ஒரு தொகுதிப் பொருள்கள்

அரியாலை, ஜூலை 23

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு நுகர்வோர் சமாசத்திற்கு கப்பற் கட்டணமின்றி ஒரு தொகுதி உணவுப் பொருள்கள் கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளதாகச் சமாசத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

ஐம்பது நீரிறைக்கும் இயந்திரங்கள், தேங்காய் எண்ணெய் மற்றும் சவர்க்கார வகைகள், பால்மா உட்பட 45 வகையான பொருள்களே எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இப்பொருள்கள் பகிர்ந்து வழங்கப்படும்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சமாசத்தில் பொருள்களுக்கான பெறுமதிகளைச் செலுத்தி உடனடியாகப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறது. (ஐ-17)

# சட்டமானி கற்கைநெறிக்கு தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் சட்டமானி கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்களுள் தகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டோரின் விவரங்கள் கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து யாழ். மத்திய கல்லூரியில் இயங்கும் திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய அலுவலகத்துக்கு கிடைத்துள்ளன. விவரங்களை அலுவலக நேரங்களில் பார்வையிடலாம் என யாழ். பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி தாம் கொழும்பு செல்லவிருப்பதாகவும், பட்டப் பின் கற்கை டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தமது ஆவணங்களையும், தொழிலுரிமையும் சிறு வணிக முகாமைத்துவமும் கற்கை நெறியில் பயிலும் மாணவர்கள் தமது கணக்கியலும், நிதியியலும் பாட ஒப்படை இலக்கம் ஐயும் 26 ஆம் திகதிக்கு முன்னர் தமது அலுவலகத்தில் ஒப்படைக்குமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-ரீ)

# சாஸ்திரிய நடனங்கள் தொடர்பான முதல்நூல்

## வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 23

தென்னாசிய சாஸ்திரிய நடனங்கள் பற்றி தமிழில் எழுதப்பட்ட முதலாவது நூல் இதுவே. பல்லாண்டு கால கலைத் தொடர்புகளின் பயனே இந் நூல். மாணவர்களுக்கு மட்டுமன்றி கலைத்துறையுடன் தொடர்புடைய ஏனையோருக்கும் ஒரு வரப்பிரசாதமாக இந்த நூல் அமையும்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகப் பேராசிரியர் ப. கோபாலகிஷ்ணன் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் பேராசிரியர் வி. சிவசாமி எழுதிய 'தென்னாசிய சாஸ்திரிய நடனங்கள் — ஒரு வரலாற்று நோக்கு' எனும் நூல் வெளியீட்டின் போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல ஆண்டுகளாக இசை, நடன மாணவர்களுக்கு சமஸ்கிருதம் மட்டுமன்றி கலைகள் பற்றியும் கற்பித்து வந்தவர் பேராசிரியர் சிவசாமி. இக் கலைகள் தொடர்பாக இலங்கையிலும், இந்தியாவிலும் உள்ள பல கலைஞர்களுடன் கொண்டிருந்த தொடர்புகள், இசை, நடனம் பற்றி இவர் எழுதிய விமர்சனங்கள், கட்டுரைகள் போன்றவற்றின் வாயிலாகவும், அனுபவ வாயிலாகவுமே இந்த நூலினை அவர் படைத்துள்ளார் - என்றார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலினை வெளியிட்ட யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பேசுகையில் -

இசை, நடனம் முதலிய கலைகளில் மிகுந்த ஈடுபாடு உள்ளவர் நூலாசிரியர். மாணவர் நலனில் தன்னலமற்ற அக்கறையுடன் செயற்படுபவர். எனவே இது போன்ற நூல்களை மேலும் ஆக்கி வெளியிட வேண்டும் என்றார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சண்முகதாஸின் வாழ்த்துரையும், நடனத்துறைத் தலைவர் கலாநிதி சபா ஜெயராசா பிரதிக்கல்விப் பணிப்பாளர் (இசை) சு. கணபதிப்பிள்ளை ஆகியோரின் ஆய்வுரைகளும் இடம் பெற்றன.

நூலின் முதற் பிரதியை ச. ரவீந்திராவும், சிறப்புப் பிரதியை க. தேவராஜாவும் பெற்றுக்கொண்டனர். (ஐ-ரீ)

# கீரிமலைக்கு வேற்பெருமான் பவனி

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தீர்த்தோற்சவ தினத்தை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை காலை மாவிட்டபுரத்திலிருந்து வேற்பெருமான் திருமுறை பஜனைகளோடு பவனிவந்து கீரிமலை கண்டகி சமுத்திர தீர்த்த வைபவத்துக்கு எழுந்தருள்வார்.

கீரிமலைத் தீர்த்தத்தில் காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரை அடியார்கள் ஸ்நான சங்கற்பம் செய்வதற்கும், பிதிர்த்தர்ப்பணங்கள் மற்றும் புண்ணிய கருமங்கள் ஆற்றுவதற்கும் அனுமதிக்கப்படுவர்.

ஆடி அமாவாசை தினமாகிய இன்று தந்தையை இழந்தவர்கள் விரதம் அனுஷ்டித்து புண்ணிய தீர்த்தங்களில் பிதிர்த் தர்ப்பணங்களையும், புண்ணிய கர்மாக்களையும் நிறைவேற்றுவது குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

# தராசுப்படிகளுக்கு முத்திரையிடல்

யாழ். மாவட்ட நிறுவைகள் அளவைகள் திணைக்களத்தினால் இன்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை சுன்னாகம் பட்டின சபை காரியாலயத்தில் காலை 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 1-30 மணி வரை தராசுப்படிகளுக்கு முத்திரையிடும் பணி நடைபெறும்,

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இப் பகுதியிலுள்ள சந்தை வியாபாரிகள், கடை உரிமையாளர்கள், பேக்கரி, விறகுகாலை உரிமையாளர் சகலரும் தத்தமது நிறுவை உபகரணங்களுக்குத் தவறாது முத்திரையிட்டுக் கொள்ளுமாறு யாழ். செயலக நிறுவை அளவைத் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி என். நாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

முத்திரை யிடப்படாத தராசுப் படிகள் சந்தைகளிலும், ஏனைய விற்பனை நிலையங்களிலும் பாவனையில் இருப்பதாக பல முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-30)

# சாவகச்சேரி வாசிகளுக்கு வீடமைப்புக் கடன்

## விண்ணப்பம் விநியோகம்

தென்மராட்சி, ஜூலை 23

யாழ். மாவட்ட வீடமைப்புத் திணைக்களத்தினால் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ளவர்களுக்குவீடமைப்புக் கடன்களை வழங்கவுள்ளன.

இந்த வீடமைப்புக் கடன் பெறுவதற்கான விண்ணப்பங்கள் சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை வழங்கப்படுமெனவும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஒகஸ்ட் மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டுமெனவும்—

நகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிக்கும் சொந்தக் காணியுள்ளவர்கள் வீடமைப்புக் கடன் பெறுவதற்கு விண்ணப்பிக்லாமென நகரசபை செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ-117)

# ஆங்கிலக் கல்விப்...

(ஏழாம் பக்கத் தொடர்)

கல்வி கற்கிறார்கள். இதைவிட தமது திறமை மூலம் கட்டாயப்படுத்தித் தமது பிள்ளைகளுக்குச் சிறந்த ஆசிரியர்கள் மூலமும் ஆங்கில பாடத்தைக் கற்பிக்கிறார்கள்.

ஆனால் ஏனைய மாணவர்கள் ஆங்கிலத்தில் மிகவும் பின் தங்கி விடுகிறார்கள். தமது பிள்ளைகள் பாதிக்கப்படவில்லைத்தானே என்ற எண்ணத்துடன் ஆங்கில போதனை குறித்து கல்வி அதிகாரிகள் அசமந்தப்போக்காக இருந்தால் இவர்கள் மாணவ சமூகத்திற்குச் செய்யும் மிகப்பெரிய பாதிப்பாகவே இது முடியும்.

யாழ்ப்பாணத்தில் இன்று இயங்கும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் ஆங்கில பாட பயிற்சி நெறிக்கு ஆசிரிய மாணவர்கள் மிகவும் பற்றாக்குறையாக உள்ளனர் இப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முடியாதா? ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு ஒரு தொகுதி ஆசிரியர்களை அனுப்பி சிறப்பாக பயிற்றுவித்து ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெற வகைசெயய முடியாதா? இவ்வாறு செய்தால் ஆசிரியர்கள் மூலம் மாணவருக்கு ஆங்கிலத்தைச் சிறப்பாகக் கற்பிக்க முடியும்.

இது குறித்து கல்வி அமைச்சும், கல்வி அதிகாரிகளும் சிந்தித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ந்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் மூலம் குறைந்த கூலியில் சமாளிக்க முடியும் என்று எண்ணினால் மாணவர் சமூகம் தொடர்ந்தும் ஆங்கில மொழியில் உரிய தேர்ச்சி பெற முடியாது பின்தங்க நேரிடும்.

ஆங்கில போதனையின் அவசியத்தை உணர்ந்து அதனை உரிய முறையில் போதிக்க, அதில் சேர்ந்தவர்களை உருவாக்க வேண்டும்.

அதனை விடுத்து ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்குவதால் மட்டும் மாணவரின் ஆங்கில அறிவைப் பெருக்க முடியாது

மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு அரசு செயற்பட வேண்டும். கல்வி அதிகாரிகள் அதற்குத் தூண்டுதலாகச் செயலாற்றலாம்.

இப்போதாவது புதிய சிந்தனையுடன் செயலாற்றாவிடில் எதிர்காலச் சந்ததியும் ஆங்கில அறிவில் பின்தங்க நேரிடும்.

# திரைமறைவில்...

(ஏழாம்பக்கத் தொடர்)

கப்புறானை மீண்டும் உள்ளே சென்று மூடி மறைத்த முருகனை திரும்ப யானையில் ஏற்றி கோயிலுக்கு கொண்டு செல்வார். அங்கு ஆராத்திப் பெண்கள் ஆலாத்தி எடுக்க உற்சவம் நிறைவு பெறும். இதன்பின் கொடியேற்றம் தொடங்கி தீர்த்தம், தீக்குளிப்பு ஆகியவையுடன் நிறைவுபெறும்.

கதிர்காமக் கொடியேற்ற நாளில் செல்லச்சந்நிதி முருகனை இங்கிருந்து தேங்காய்கள் உடைத்து தீப அலங்காரங்களுடன் வழியனுப்புவர். இப்படி 150 யார் தூரம் வரை அர்ச்சகர்களும் பக்தர்களும் வழியனுப்பி வைப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். மறுபடியும் கதிர்காமம் தீர்த்தத் திருவிழாவிலன்று இரவு நடுநிசியில் சுவாமி இங்கு திரும்பி வருவதை அடியார்கள் பக்திப் பரவசத்துடன் கண்டு மகிழ்வர் இதற்கு அத்தாட்சியாக செல்வச்சந்நிதி முருகனை யாழ்ப்பாணம் திருப்பி அனுப்பும் புனித நிகழ்ச்சியை தீர்த்தத் திருவிழாவிலன்று கொண்டாடுவர்.

இன்று கதிர்காமக் கந்தனின் கொடியேற்ற நாள். இற்றைக்கு முப்பதுவருடங்களுக்கு முன் இங்கிருந்து பக்தர்கள் கால் நடையாகவும், வாகனங்களிலும் கதிர்காமத் தரிசனத்துக்குச் சென்றார்கள். இன்றைய சூழ்நிலையில் எம் மக்களில் அனேகருக்கு அந்தப் பாக்கியத்தை முருகப் பெருமான் குறைத்துவிட்டார், மீண்டும் தமிழ் மக்களுக்கு அருவமும் உருவமுமாகி நிற்கும் அவனது திருக்கோலத்தை தரிசிக்கவும், புனித மாணிக்க கங்கையில் நீராடி கதிரமலை ஏறும் பாக்கியத்தையும் ஈய வேண்டுமென்று அவன் தாள் பணிவோம்.

''காலைத்தூக்கியாடும்
கண்ணுதல் தந்த
கதிர்காமத்தையனே!
கழலடி நம்பிவந்தேன்
என் வினைப்பகை தீர்
தெய்வமே.''

- யோகர் சுவாமிகள்


# வாழ்த்துகின்றேன்

நேற்றைய தினம் கலாபூஷண விருது பெற்ற
எனது மதிப்பிற்குரிய ஆசான்
''கலாபூஷணம்''
**பெ. சுப்பிரமணியம்**
(மணியம் ஆட்ஸ்)

அவர்களை ஓவியத்துறையில் மேலும் பல அரிய சாதனைகள் புரிந்து பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

எஸ். எஸ். யசோதரன்
ஆட்ஸ்
123, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(57784)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலீஸ் நிலையங்களில்

# தமிழில் முறைப்பாடு பதிய நடவடிக்கை எடுக்கப்படும்

குடாநாட்டில் பொலீஸ் நிலையங்களிலும், நீதிமன்றங்களிலும் சிங்களத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுவதைத் தவிர்க்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்ட பின்னர் முடிவு தெரிவிப்பதாக சிவில் நிர்வாக காரியாலயப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

பொலீஸ் நிலையங்களிலும், நீதிமன்றங்களிலும் சிங்களத்தில் வாக்குமூலங்களும், முறைப்பாடுகளும் பதியப்படுவதனால் சிங்கள மொழி தெரியாத தமிழ் மக்கள் அதிகம் பாதிக்கப்படுவதாகவும்—

இதனைத்தடுத்து தமிழில் முறைப்பாடுகளையும், வாக்குமூலங்களையும் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறும்—

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழு சிவில் நிர்வாகக் காரியாலய பொறுப்பதிகாரிக்கு அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தது.

அக்கடிதத்துக்கு அனுப்பிய பதில் கடிதத்திலேயே சிவில் நிர்வாகப் பொறுப்பதிகாரி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் முறைப்பாடு பதிவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை என்னால் தனித்து எடுக்க முடியாது. எனவே உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட பின்னர் முடிவுகளைத் தெரிவிப்பதாக தெரிவித்துள்ளார்.


வெளிவந்துவிட்டது!

-சுந்தரன்-

4 ஆவது இதழ் (15 ஆடி-ஆவணி)

(சி/4357)



## கண்ணீர் அஞ்சலி

நாகம்ஸ் சினிமாவில் 25 வருடகாலமாக முகாமையாளராகக் கடமையாற்றி 22-7-1998 இல் இறைபதம் அடைந்த

அமரர்

**நாகலிங்கம் அருமைநாயகம்**

அவர்களுக்கு எங்கள் கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகிறோம்.

ஊழியர்கள்,

நாகம்ஸ் சினிமா நிர்வாகம். (57788)



## கண்ணீர் அஞ்சலி

எமது சுன்னாகம் நீர் விநியோகத் திட்டத்தில் கடமை புரியும்

திரு. சுப்பிரமணியம் பூபாலராசா

அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

**சுப்பிரமணியம் நாகம்மா**

20-07-1998 இல் காலமானார்.

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும், உறவினருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடபிராந்திய நலன்புரிச் சங்கம்,
தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
யாழ்ப்பாணம்.

(57794)


## வீதிகளின் பலத்த சேதம் காரணமாக

# பஸ்சேவைகளை நிறுத்தும் நிலை

## முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் இடம்பெறும் வீதிகள் திருத்தப்படாமையினால் நாளாந்தம் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களினது வில்லுத்தகடுகள் உடைந்த வண்ணமுள்ளன. எனவே திருத்தப்படாத வீதிகளில் நடத்தப்படும் பஸ் சேவைகளை நிறுத்த வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறோம்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் எமது செய்தியாவரிடம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

யாழ். குடா நாட்டு வீதிகள் அனைத்தும் குண்டும் குழியுமாக வாகனங்கள் எதுவும் செல்ல முடியாத அளவிற்கு சேதமான நிலையிலுள்ளன.

விசேடமாக எமது பஸ் சேவைகள் நடத்தப்படும் பன்னிரண்டு வீதிகளில் பஸ் சேவையைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலையேற்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு விளான் சந்திவரை மூன்று மதகுகள் சேதமடைந்துள்ளன. அத்துடன் விளான் சந்தியிலிருந்து சித்திரமேழிச் சந்திவரையுள்ள வீதியும் மோசமான நிலையிலுள்ளது.

அராலிச் சந்தியிலிருந்து செட்டியாமடம் சந்திவரையான வீதியும், நவாலி தேவாலயத்திலிருந்து வட்டுக்கோட்டை வரையும், மாவடிச்சந்தியிலிருந்து மூளாய் வரையான வீதிகளிலும் வாகனத்தைச்செலுத்த முடியாதுள்ளது. இதேபோன்று அராலி வட்டுக்கோட்டை ஊடாக மாவடிச்சந்தியிலிருந்து மாதகல் முடிவு இடம் வரையும்.

அளவெட்டி டச் வீதிச் சந்தியிலிருந்து விளான்வரையான வீதியும் —

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியும் —

புதுக்காட்டிலிருந்து மருதங்கேணி வரையான வீதியும் —

யாழ். குறிகாட்டுவான் பாதையில் பழைய துறையிலிருந்து குறிகாட்டுவான் வரையும் —

மிருசுவில் தொடக்கம் உசன் வரையுள்ள வீதியும்—

கைதடிச் சந்தியிலிருந்து கைதடி வடக்கு வீதி வரையும் —

பருத்தித்துறை கொடிகாமம் பாதையில் அணிஞ்சியடியிலிருந்து வரணிச் சந்தி வரையும் —

பருத்தித்துறை சாவகச்சேரிப் பாதையில் பலாலிப் புலம் காளி கோயிலடியிலிருந்து சரசாலை வரையும் —

உள்ள வீதிகள் நீண்டகாலமாகத் திருத்தப்படாமலிருக்கின்றன.

மேற்குறிப்பிட்ட வீதிகளில் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்கள் வில்லுத் தகடுகள் உடைபட்டோ அல்லது வேறு ஏதோ ஒருவகையிலோ சேதங்களுக்கு உள்ளாகின்றன. வீதிகளின் சீரற்ற நிலையினால் நாளாந்தம் 10 பஸ்கள் வரை திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளது. பழுதுபடும் பஸ்களைத் திருத்துவதற்கான உதிரிப் பாகங்களை தற்பொழுது யாழ்ப்பாணத்தில் பெற முடியாதுள்ளது. வில்லுத்தகடு போன்ற உதிரிப்பாகங்களைப் பெறுவதற்கு கொழும்புக்கே செல்ல வேண்டும். வீதிகள் திருத்தம் செய்யப்பட்டால் பொதுமக்களுக்கு திருப்தியான சேவையை எம்மால் வழங்க முடியும்.

வீதிகள் திருத்தம் தொடர்பாக யாழ். செயலக மட்டத்தில் நடைபெறும் அரச திணைக்களத் தலைவர்களின் கூட்டங்களில் நாம் கூறிவருகின்ற போதும் எவரும் பொருட்படுத்தவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை செயலகத்தில் நடந்த கூட்டத்தில் இது தொடர்பாக பிரஸ்தாபித்தபோது வடக்கு மீள்குடியேற்ற அதிகாரசபை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு இதற்கென 2கோடி ரூபாவும், உள்ளூராட்சித் திணைக்களங்களுக்கு 4 கோடி ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

தார் கொண்டு வருவதற்கு விசேட கப்பலை ஒழுங்கு செய்து தரமுடியும் என்றும் உருளைகள் போன்றவற்றை வாங்குவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெருந்தெருக்கள் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியன இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்து வீதிகளைத் திருத்தம் செய்து பஸ் சேவையை ஒழுங்காக நடத்த உதவவேண்டும். இது குறித்து சம்பந்தப்பட்ட பாதைகளில் பயணஞ் செய்யும் பொதுமக்கள், மற்றும் பொது அமைப்புக்கள் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்—என்று அவர் விவரித்தார்.

(ஐ-5-ரீ)

# "கிறீன் குறொஸ்" தேசிய சபைக்கு குடாநாட்டிலிருந்து 15 பேர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

சர்வதேச சுற்றாடல் பாதுகாப்பு நிறுவனமான "கிறீன் குறொஸ்" அமைப்பின் ஸ்ரீ லங்கா தேசிய கிளையின உறுப்பினர்களாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பதினைந்து பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் வருடாந்த விசேட நியமனப் பட்டியலில் இவர்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளதாக, தேசியக் கிளையின் தலைவரும் தேசிய இணைப்பாளருமான கலாநிதி நகுலேஸ் கதிர்காமநாதன் அறிவித்துள்ளார்.

இவர்கள் ஒரு வருட காலத்துக்கு கௌரவ உறுப்பினர்களாகப் பணிபுரிந்து, தத்தமது துறைகளில் சுற்றாடல் பாதுகாப்பை ஊக்குவிப்பார்கள். இவர்களின் பங்கு பணிகளின் அடிப்படையில் சுற்றாடல் பாதுகாப்பு தேசிய சபையின் ஆலோசகர்களாக நியமிக்கப்படும் வாய்ப்பும் உண்டு எனவும் இது சம்பந்தமான செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுதந்திரம் அடைந்த 50வது வருடத்தை முன்னிட்டு அறிவிக்கப்பட்ட விசேட திட்டத்தின் கீழ் கௌரவ அங்கத்தவர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்ட பதினைந்து பேரின் விவரம் வருமாறு:

தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர் எஸ். பாலச்சந்திரன், வி. பி. பாலசிங்கம், பேராசிரியர் பி. பாலசுந்தரம் பிள்ளை, எம். வி. கானமயில்நாதன், பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், வண. ஜோசப் பிரான்சிஸ், க. கனகராசா, டாக்டர் எஸ். குகதாசன், எஸ். சத்தியசீலன், எஸ். தனபாலன், டாக்டர் ஆர். தெய்வேந்திரன், ஆர். தில்லைநாதர், ரி. வைத்திலிங்கம், எஸ். உதயசூரியன்.

(அ)

# புதிய தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

பளை இத்தாவில முருகமூர்த்தி ஆலய வேல்ரத வெள்ளோட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும்.

ரதத்தை உருவாக்கிய ஸ்தபதி விஸ்வப் பிரஹ்ம ஸ்ரீ ஆறுமுகம் கந்தசாமி ஆச்சாரியாரையும், அவர்தம்குழுவினரையும் கௌரவிக்கும வைபவமும் அன்றைய தினம் நடைபெறவுள்ளது. (ஐ-ரீ)

# தரிப்பிடம் அமைப்பு

உரும்பராய், ஜூலை 23

உரும்பராய் ஸ்ரீ பர்வத பத்தினி அம்மன் ஆலயத்தின் கயிலாய வாகனத்தை நிறுத்துவதற்கான மண்டபக் கால்கோள் விழா அண்மையில் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெற்றது.

ஆலயத்தின் பிரதமகுரு சிவாகமஞானபானு க. மு. சோமசுந்தரக் குருக்கள் அடிக்கல் நட்டார்.

(ஐ-154)


## நல்லூர், வடமராட்சி 'லயன்ஸ்' கழகங்களும் அரங்க செயற்பாட்டுக் குழுவும்

இணைந்து நடத்தும்

# பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு

க. பொ. த. (உ/த) ஓகஸ்ட் - 1998

மேற்படி கருத்தரங்கு கீழ்த்தரப்படும் சிறு மாற்றங்களுடனான நேர அட்டவணைப்படி தொடர்ந்து நடைபெறும்.

() நேர அட்டவணை ()

| திகதி | நேரம் | இடம் | பாடம் | ஆசிரியர் |
|---|---|---|---|---|
| 23-7-98 | 9. 00 A. m. | இளங்கலைஞர் மன்றம் | — இரசாயனவியல் | — தில்லைநாதன் |
| | 2. 30 P. m. | இளங்கலைஞர் மன்றம் | — பௌதிகவியல் | — வர்ணம் |
| | 9. 00 A. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — தாவரவியல் | — குகாதரன் |
| | 9. 00 A. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — தூய/பிரயோக கணிதம் | — குணசிங்கம் |
| 24-7-98 | 9. 00 A. m. | இளங்கலைஞர் மன்றம் | — தாவரவியல் | — குகாதரன்/குணசீலன் |
| | 9. 00 A. m. | Science Hall | — தூய/பிரயோக கணிதம் | — குணசிங்கம் |
| | 9. 00 A. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — பௌதிகவியல் | — வர்ணம் |
| 25-7-98 | 9. 00 A. m. | இளங்கலைஞர் மன்றம் | — விலங்கியல் | — ஈஸ்வரதாசன் |
| | 2. 00 P. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — பௌதிகவியல் | — கணேசன் |
| | 9. 00 A. m. | Science Hall | — வணிகப் புள்ளி விபரவியல் | — றோய் |
| 26-7-98 | 9. 00 A. m. | இளங்கலைஞர் மன்றம் | — பௌதிகவியல் | — கணேசன் |
| | 9. 00 A. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — விலங்கியல் | — ஈஸ்வரதாசன் |
| | 9. 00 A. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — வணிகப் புள்ளி விபரவியல் | — றோய் |
| | 9. 00 A. m. | வட இந்து மகளிர் கல்லூரி | — தூய/பிரயோக கணிதம் | — குணசிங்கம் |

குறிப்பு: தவிர்க்கமுடியாத காரணத்தினால் கணக்கியல் ஆசிரியர் திரு. சிறி அவர்கள் கருத்தரங்கிற்கு சமுகமளிக்க முடியாதுள்ளது.

(57795)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலையிலும் வில்லூன்றியிலும்

# இன்று ஆடி அமாவாசைத் தீர்த்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஆடி அமாவாசை விரதத்தையொட்டி இன்று கீரிமலையிலும், வில்லூன்றியிலும் தீர்த்தம் மற்றும் நிகழ்வுகள் இடம் பெறவிருக்கின்றன.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் பிதிர்கடமைகளை மக்கள் நிறைவேற்ற இன்று காலையில் கீரிமலையில் தீர்த்தம் நடைபெறும்.

மாவைக் கந்தனும், கீரிமலைச் சிவனும் தீர்த்தக் கேணியில் தீர்த்தமாட ஏற்பாடாகியுள்ளது.

இன்று நடைபெறும் நிகழ்வுகளில் மக்கள் பங்கு பற்ற வசதியாக யாழ். பஸ் நிலையத்தில் இருந்து தெல்லிப்பழை வரை விசேட பஸ் சேவையும் நடத்தப்பட உள்ளது.

யாழ்ப்பாணம் வில்லூன்றி புனித தீர்த்தத்தில் வழமை போல இம்முறையும் ஆடி அமாவாசை விழா நடைபெறவிருக்கிறது.

அதிகாலை 7 மணிக்கு வில்லூன்றி விநாயகர் தீர்த்தக் கரைக்கு எழுந்தருளி 8 மணிக்கு தீர்த்தவாரி இடம்பெறும்.

பிதிர்த் தர்ப்பணங்களை காலை 8 மணி முதல் பகல் 1 மணிவரை மேற்கொள்ள ஏற்பாடாகியுள்ளது. (இ-3)

## பத்திரிகையாளர் கைது குறித்து அரசு அறிக்கை

கொழும்பு, ஜூலை 23

வீரகேசரி பத்திரிகையைச் சேர்ந்த இரு பத்திரிகையாளர்களான எஸ். ஸ்ரீகஜன், பி. மாணிக்கவாசகம் ஆகியோர் கைது செய்யப்பட்டு பயங்கரவாத செயற்பாட்டு விசாரணைப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிக்கை வெளியிட்டது.

இவர்களுக்கு எதிராக ஆதாரம் காணப்பட்டதால் கைது செய்யப்பட்டு தற்சமயம் விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகள் பூர்த்தியானதும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதே சமயம் இந்த இரு பத்திரிகையாளர்களையும் பார்வையிட இதுவரை உறவினர்களுக்கு அனுமதியளிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3-21)

## கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 23

'உதயன்' நிறுவனம் மற்றும் யாழ். றோட்டரிக் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழன் மாலை பல்கலைக்கழக கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணி — பமிலியன் வி. க. எதிர் ஜொலி ஸ்ரார் வி. க. (பெண்கள்)

★ மாலை 5 மணி — உதயன் வி. க. எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் வி. க. (ஆண்கள்)

(இ-ரீ)


எமது வீடியோ CD வெளியீடுகள்!

★ பூந்தோட்டம்

★ நட்புக்காக

★ ப்ரியமுடன்

★ ஆயுதபூஜை

★ TITANIC

என்றும் நேரடி CD பதிவுகளின் முன்னோடிகள்!

சுப்பஸோ வீடியோ

யாழ்ப்பாணம்.

(சி/4358)


## நிவாரண வெட்டை கண்டித்துப் பேரணி

### முல்லையில் நேற்று நடந்தது

வவுனியா, ஜூலை 23

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிவாரண வெட்டைக் கண்டித்து நேற்று பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வல்லிபுனம், உடையார்கட்டு, விஸ்வமடு உட்படப் பல பகுதிகளில் இருந்தும் வந்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் இப்பேரணியை ஏற்பாடு செய்திருந்தது.

புதுக்குடியிருப்புச் சந்தியில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி முல்லைத்தீவு செயலகத்தை அடைந்தது.

அங்கு நடந்த கூட்டத்தை யடுத்து ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜர் செயலக அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-3)

## மிதிவெடியில் ஒருவர் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

மிதிவெடியில் சிக்குண்டு ஒருவர் வலது காலை முழங்காலுக்குக் கீழ் இழந்தார்.

உரும்பிராய் வடக்கில் நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான குட்டியர் இராசேஸ்வரன் (வயது-29) என்பவரே கால் இழந்து படுகாயமடைந்தவராவார்.

தோட்ட வேலைக்குச் சென்ற வேளையே இச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வழமையாகச் செல்லும் பாதையை விட்டு சிறிது விலகிச் சென்றபோது இவர் மிதிவெடியில் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## தீவிர...

(முதலாம் பக்கத் தொடர்)

நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகீர் மௌலானா, தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் அதன் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம், ஈ. பி. டி. பி. சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார், புளொட் சார்பில் அதன் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த. சித்தார்த்தன், முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஹக்கீம் ஆகியோர் உரையாற்றினர்.

செம்மணி புதைகுழி விடயம் தொடர்பாக அரசு உடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்றும் — சர்வதேச மனித உரிமை அமைப்பு பிரதிநிதிகள், நடுநிலையாளர்கள், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் ஆகியோர் முன்பாக இந்தப் புதைகுழிகள் தோண்டப்பட வேண்டும் என்றும் — விவாதத்தில் பேசியவர்கள் வற்புறுத்தினார்கள். (இ-3)

## பழுதடைந்த உ. கிழங்கு கைப்பற்றி அழிப்பு

தென்மராட்சி, ஜூலை 23

சாவகச்சேரி நகரப்பகுதியில் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட பெருமளவு உருளைக்கிழங்கு சுகாதாரத் திணைக்களத் திடீர் பரிசோதனைக் குழுவினரால் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்துகொண்டு வரப்பட்ட உருளைக்கிழங்குப் பெட்டிகளிலிருந்துகளஞ்கியப்படுத்துவதற்காக கடை அறையொன்றில் வைக்கப்பட்டிருந்த போதே அவை கைப்பற்றப்பட்டன. (ஐ-117)

## கடைகள் இன்று மூடப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஆடி அமாவாசை விரத தினமான இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள கடைகள் யாவும் மூடப்படும் என யாழ்ப்பாணம் வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

விடுமுறை நாளானகடந்த 7 ஆம் திகதி வர்த்தக நிலையங்களை திறக்குமாறும் — அதற்குப்பதிலாக இன்றைய தினத்தை விடுமுறையாகக்கடைப்பிடிக்குமாறும்- வணிகர்கழகம் அறிவித்திருந்தது. (இ-3)


உ

சாவகச்சேரி - பெருங்குளம்

அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை

(பதிவு இல. HA/ JA/5/261 of 5 -12- 1988)

அறிவித்தல்

01. தற்பொழுது பதவியில் இருக்கும் மேற்படி ஆலயத்தின் பரிபாலனசபை, பொதுச்சபையினால் தெரிவுசெய்யப்படவிருக்கும் புதிய பரிபாலன சபை பொறுப்பு ஏற்கும்வரையும் தொடர்ந்து பதவியிலிருந்து செயலாற்றும் என்பதை அறியத் தருகின்றோம்.

02. 21. 06. 98, 05. 07. 98 ஆகிய திகதிகளில் ஆலய பரிபாலனசபைத் தலைவர் திரு. வே. பாலசுப்பிரமணியத்தின் தலைமையில் நடந்த இருநாள் நிர்வாகச் சபைக் கூட்டங்களிலும் இந்த ஆலயத்தின் குருவாகச் சேவையாற்றி வந்த சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்களின் சேவையை நிறுத்துவதென தலைவர் உட்பட சகல உறுப்பினர்களாலும் எவ்விதமான மறுப்புமில்லாமல் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்திற்கு அமைவாக சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் இந்த ஆலயத்தின் சேவையில் தற்பொழுது இல்லை என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

சி. இராமலிங்கம்
உப - தலைவர்

இ. கிருஷ்ணசாமி
செயலாளர்

பி. சின்னத்துரை
பொருளாளர்

(சி-4356)


## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்)

''மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றுகிறது. இது போன்ற குற்றச் செயல்கள் இடம் பெற்றிருக்குமானால் அவற்றை மூடி மறைக்க அரசாங்கம் ஒருபோதும் முயற்சி செய்யாது'' என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் சுமார் 400 சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாக கிருஷாந்தி கொலை வழக்கில் முதலாவது எதிரியான பான்ஸ் கோப்ரல் சோமரட்ண ராஜபக்ஷ தெரிவித்ததும்—

இதனை அடுத்து இந்த விவகாரம் சூடு பிடிக்க ஆரம்பித்து நாடாளுமன்றத்தில் கவன ஈர்ப்புப் பிரேரணை கொண்டுவரப்பட்டதும்— தெரிந்தவையே.

நேற்று ஐ.தே.க. நாடாளுமன்றஉறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வரினால் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட கவன ஈர்ப்புப் பிரேரணையின்போது அரசின் சார்பில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே பதில் அளித்துப் பேசினார்.

செம்மணி புதைகுழி விவகாரம் குறித்த குற்றச்சாட்டை மூடி மறைக்கும் எண்ணம் எதுவும் அரசாங்கத்துக்குக் கிடையாது என்று பெர்னான்டோபுள்ளே கூறினார்.

இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து திட்டவட்டமான விசாரணை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டை தெரிவித்த இராணுவ வீரர் விரைவில் விசாரிக்கப்படுவார் என்றும் பெர்னான்டோபுள்ளே கூறினார். (இ-6-3)

## ஆஞ்சநேயர் ஆலயம்

வட்டுக்கோட்டை, ஜூலை23

சங்கரத்தை முருகன் கோயிலில் புதிய ஆஞ்சநேயர்ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அராலி தெற்கைச் சேர்ந்த சிற்பாசிரியர் வி. தம்பிராசா குழுவினரால் அமைக்கப்பட்டு வரும் மேற்படி ஆலயத்தில் விரைவில் ஆஞ்சநேயப் பெருமான் சிலை பிரதிட்டை செய்து வைக்கப்படவுள்ளது. (ஐ-12)

## சூட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்)

ராஜா விசாரணையை நாளை வரை ஒத்தி வைத்ததுடன், பருத்தித்துறை இராணுவ முகாமைச்சேர்ந்த இரு இராணுவத்தினரை இது தொடர்பாக இராணுவ பொலீஸ் பாதுகாப்பில் வைக்குமாறு உத்தரவிட்டு, நாளை நீதிமன்றில் அவர்களை ஆஜராக்குமாறு பொலீஸாரைக் கேட்டுக்கொண்டார்.

(இ-109-173)

## 'ஹண்டி'யில் விவசாய பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 23

பருத்தித்துறையில்பொருள்கள் இறக்கிக் கொண்டிருக்கும் 'ஹண்டி' கப்பலில் வெங்காயம், புகையிலை மற்றும் விவசாய உற்பத்திப் பொருள்களை அனுப்ப விரும்புபவர்களை யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு உதவித்திட்டப் பணிப்பாளர் எஸ். நல்லையா கேட்டுள்ளார். (இ-3)


மரண அறிவித்தல்

திருமதி

உதயச்சந்திரன் உதாரணி

மூளாயைப்பிறப்பிடமாகக்கொண்டஉதயச்சந்திரன் உதாரணி 21. 07. 98 செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் (லோட்டஸ்கராஜ்) செல்லையா உதயச்சந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கூட்டுறவுப் பரிசோதகர் பாலசுந்தரம் தம்பதிகளின் அன்பு மகளும், சோபனாவின் அன்புத்தாயாரும், தங்கவேலு, சத்தியபாமா, பரிபூரண ஐஸ்வரியம் (திருமதி சின்னத்துரை) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சனிக்கிழமை (25.07.98) இல. 48, மக்கேவுசர், அடைவு வீதி, உவர்மலை, திருகோணமலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
செ. யோகராஜா

இல. 72, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (T. P. 026 - 22457) (57778)



சமையல் ஆள் தேவை

கொழும்பிலுள்ள பிரபல நிறுவனம் ஒன்றின் மூத்த அதிகாரிக்கு சமைப்பதற்கு ஆள் தேவை. சகல வகையான உணவுப் பதார்த்தங்களையும் — குறிப்பாக யாழ்ப்பாண உணவு வகைகளைத் — தயாரிக்கத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். தங்குவதற்கு வசதி செய்து தரப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

விளம்பர இலக்கம்:- 763,
C/O உதயன்,
யாழ்ப்பாணம்.

(சி/4359)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 23 -07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org